விலை சதம் 60

பாவியுங்கள்!
அண்ணா பற்பொடி
பைக்கட் -/20சதம்
பாவித்த மக்கள்
மீண்டும்
விரும்பிப் பாவிப்பது
அண்ணா பற்பொடி

RECEIVED
1980-1-14
PERIODICALS
DIVISION
UNIVERSITY OF SRI LANKA ... CAMPUS

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

பக்கங்கள் — 10

சிக்கன சலவைக்கு
சிறந்த
மில்க்வைற் 50 சதம்
துண்டு சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 21 | மார்கழி 29 | ஸபர் 24 | ஞாயிற்றுக்கிழமை | (13—1 80) | இதழ் 335

# புதுவை சட்டசபை முதல்வர்
# தி. மு. க. இராமச்சந்திரன்

## கருணாநிதி முன்மொழிய ஏகமனதாக தெரிவானார்

புதுச்சேரி, ஜன. 12
பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபை தி. மு. க.- இந்திரா காங்கிரஸ்-முஸ்லிம் லீக் கூட்டரசாங்க அமைச்சரவையின் தலைவராக தி. மு.க.வைச் சேர்ந்த திரு. டி. இராமச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு அமைச்சரவையில் தி. மு. க.வைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களும் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த மூன்று அமைச்சர்களும் அங்கம் வகிப்பர்.

பாண்டிச்சேரி சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களின் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றபோதே இத்தெரிவுகள் இடம்பெற்றன.

முதலமைச்சர் திரு. இராமச்சந்திரனின் பெயரை தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி முன்மொழிய இந்திரா காங்கிரஸ் எம். பி. திரு. ஆர். வெங்கட்ராகவன் வழிமொழிந்தார்.

### இந்திரா காங்கிரசுக்கு சபாநாயகர் பதவி

சட்டசபை சபாநாயகர், பொதுக்கணக்குகள் கமிட்டித் தலைவர் பதவிகள் இந்திரா காங்கிரசுக்கும் துணைச்சபாநாயகர், பார்ராளுமன்றச்செயலாளர், சட்டசபை தலைமைக்கொறடா மதிப்பீட்டுக் கமிட்டித் தலைவர் ஆகிய பதவிகளை தி. மு. க.வுக்கும் வழங்குவதென்று இரண்டரை மணித்தியாலயங்கள் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### மாஜி உள்துறை அமைச்சர்

பாண்டிச்சேரி சட்டசபையில் முன்னர் பதவியிலிருந்த அ. தி. மு. க. அரசில் உள்துறை அமைச்சராகவிருந்த திரு. டி. இராமச்சந்திரன் கடந்த தேர்தலுக்கு முன்னர் அ. தி. க.விலிருந்து ராஜினாமச் செய்துவிட்டு மண்ணடிப்பேட்டை தொகுதியில் தி. மு. க. சார்பில் போட்டியிட்டார்.

புதுச்சேரி சட்டசபையின் இந்திரா காங்கிரஸ் தலைவராக ஜனாப் எம்.ஒ. எச்.பாரூக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (இ)

## குளிருக்கு 116 பேர் பலி!

புதுடில்லி, ஜன.12
வடஇந்திய மாநிலங்களான பீகாரிலும் உத்தரப்பிரதேசத்திலும் இதுவரை 116பேர் குளிரினால் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## புதுவையில் தூய்மையான நிலையான அரசு அமையும்
### புதிய முதல்வர் உறுதி

புதுச்சேரி, ஜன. 12
பாண்டிச்சேரியில் நிலையான தூய்மையான அரசு ஒன்றை தாம் அமைக்க உள்ளதாக பாண்டிச்சேரியின் புதிய முதல் அமைச்சர் திரு டி. இராமச்சந்திரன் கூறினார்.

முதல் அமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தான் நிருபர்களிடம் பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது:

பாண்டிச்சேரியின் தனித்தன்மையைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மதுவிலக்கு விடயத்தில் மக்களின் கருத்துக்களுக்கு புதிய அரசு மதிப்பளிக்கும். (இ)

## இ. காங்கிரஸ் மாநில அரசு பதவி ஏற்றது

பெங்களூர், ஜன. 12
கர்நாடகத்தில் திரு. குண்டுராவின் தலைமையிலான 3 உறுப்பினர் கொண்ட இந்திரா காங்கிரஸ்அரசுபதவியேற்றது.

கர்நாடக கவர்னர் முன்னிலையில் 3 அமைச்சர்களும் பதவியேற்றனர்.

## எது உண்மைக்காங்கிரஸ் என இந்திரா நிரூபித்துவிட்டார்
### தேவராஜ் அர்ஸ் கூறுகிறார்

புதுடில்லி, ஜன. 12
இந்திரா காங்கிரசே உண்மையான காங்கிரஸ் என்பதை கடந்த தேர்தலில் வெற்றியீட்டியதன் மூலம் திருமதி இந்திரா காந்தி நிரூபித்துவிட்டார்.

இவ்வாறு காங்கிரஸ் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

தனது தலைமையிலான காங்கிரஸ் கட்சி தொடர்ந்து தனியாக இயங்குவதா அன்றேல் கட்சியின் பெயரை மாற்றம் செய்வதா அல்லது மற்றக் கட்சியுடன் இணைவதா என்பது பற்றி ஆராயப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து காங்கிரஸ் செயற்குழு தற்பொழுது ஆராய்ந்து வருகிறதென்றும் அவர் கூறினார். (இ)

### யாழ். மாநகரசபையின்
# 581 வீடு குடியிருப்பாளருக்கு இவ்வாரம் சொந்தமாகிறது

(யாழ்ப்பாணம்)
யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான 581 குடியிருப்பு மனைகளை குடியிருப்பாளர்களுக்கு சொந்தமாக்கப்பட உள்ளன.

இவ்வீடுகளை குடியிருப்பாளர்களிடம் கையளிக்கும் பொது வைபவம் இம்மாதம் 17-ம் திகதி காலை யாழ். மாநகரசபை பண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு யாழ். மாநகர முதல்வர் திரு.இராசா விசுவநாதன் தலைமைவகிப்பார், யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரமும் பிரதம விருந்தினராக கலந்துகொள்வர்,

மாநகரசபை குடியிருப்பு மனைகளை சொந்தமாக கையளிக்கும் விசேட ஷரத்துகளுக்கமைவாக இவ்வீடுகள் கையளிக்கப்படவுள்ளன,

இதுவரை இவ்வீடுகளுக்கு குடியிருப்பாளர்கள் மாதா மாதம் 25 ரூபாய் வாடகை கொடுத்துவந்தனர்.

581 வீடுகளில் குருநகரில் 551 வீடுகளும், நரிக்குண்டில் 22 வீடுகளும், பாஷையூரில் 08 வீடுகளும் அடக்கும்.(செ)

விலைகுறைக்கப்பட்டுள்ளது
எவரெடி எலெக்ட்ரோனிக் வாச் பற்றறிகள்
386, 389, 392, 393 நம்பர்கள்
ரூபா 23-00ல் இருந்து ரூபா 16-00 ஆகக் குறைத்துள்ளோம்.
இந்த விலைகள் அறிவித்தலின்றி மாற்றத்திற்குள்ளாகும் என்பதை வாடிக்கையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகிறோம்.
நியூ விக்ரேஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7804

எலெக்ட்ரோனிக் வாச்
திருத்துவதற்கு சிறந்த நம்பிக்கையான
ஒரே இடம்
நியூ விக்ரேஸ்
தொலைபேசி: 7804 யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில்
திரு. I. T. BENEDICT இன்
ஆங்கிலம்
கொழும்பில் வழமைபோல் இம்முறையும்
இடம் கிடையாது பலர் ஏமாற்றமுற்ற
30 மணித்தியால நவீன பயிற்
ஆரம்பம்: 21-1-80 காலை 7·30
CANTABIA INS.
166, Hospital Rd. Jaffna. (4605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுக்கல் மாவை வெளியே எடுக்க அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

பதுக்கல் செய்யப்பட்ட மா மூடைகளை அரசாங்க அதிபர்களிடம் கையளித்துப் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு விலைக்கட்டுப்பாட்டு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சில வாரங்களாக பெருமளவு வர்த்தகர்கள் மா மூடைகளைப் பதுக்கியதைத் தொடர்ந்தே இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளும்படி உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். பி. ஹேரத் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைப் பணித்துள்ளார்.

பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கோதுமை மாவிற்கு செயற்கைத் தட்டுப்பாட்டை உருவாக்கிவரும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் கூட்டுறவு ஆணையாளர், விலைக்கட்டுப்பாட்டு ஆணையாளரையும் பணித்துள்ளார்.

## இறக்குமதி அரிசி

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி கட்டுப்பாட்டு விலையில் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப் படுகின்றதா என்பதை கூட்டுறவுச் சங்கங்களுக்கும், உத்தரவு பெற்ற வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் விஜயம் செய்து கண்காணிக்கும்படி விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்களை பணித்துள்ளார்.

கோதுமை மாவைப் பதுக்குவதற்கு எதுவித காரணமுமில்லையென்றும், ஏனெனில் குறிப்பிட்டபடி வெளிநாடுகளிலிருந்து கோதுமை மா விநியோகம் நடைபெறுவதாகவும் உணவுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இம்மாதம் 20 ம் திகதிக்கு இடையில் 40,000 தொன் கோதுமை மா வந்துசேரவிருப்பதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (வெ)

---

## பரணி ரூர்ஸ் அன்ட் ட்ரவல்ஸ்

பிரான்சுக்குப் பயணம் செல்ல விரும்பும் எவருக்கும் உடனடியாக போய் திரும்ப

**U. T. A. டிக்கட்,**

ரூபா 13,440/- ட்ரவலர்ஸ் செக்

விஸா, மற்றும் சகல வசதிகளும் ஒரு கிழமைக்குள் செய்து கொடுப்பதற்கு தொடர்பு கொள்ளவும்:

**"போஸ்" BOSE**

221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

4638

---

## அறிவித்தல்

ஈழநாட்டில் தினப்பலன் எழுதும்

திருமலை

**சோதிடக்கலாநிதி க. வேலுப்பிள்ளை**

தற்போது

**56/16, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்**

என்னும் இடத்தில் தங்கியிருக்கிறார்.

(சோதிடம் எவ்வித பிரச்னைகளுக்கும் பதிலளிக்கும்)

4641

---

## தேவை

**பதவி: பொதுமுகாமையாளர் தரம் 111**

தகைமைகள்

1. வயது - 45 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
2. கூட்டுறவுப்பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி அல்லது
3. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம் அல்லது
4. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னை நாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
5. ரூபா 20,00,000த்தினை வருடாந்த மொத்த விற்பனவாககொண்ட வியாபாரத்தாபனமொன்றின் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருட கால அனுபவமுடைய ஒருவர்

சம்பளம்: ரூபா 340 - 590 / 15×10, 20×5

பிணை: உரொக்கப்பிணை ரூபா 1500/-
ஆதனப்பிணை ரூபா 5000/-

**விண்ணப்ப முடிவுத் திகதி: 30-1-1980**

விண்ணப்பம்: விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை" என விலாசமிடப்பட்டு விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மூலையில் பதவியைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
மட்டுப்படுத்திய ஊர்காவற்றுறை
**கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
ஊர்காவற்றுறை

4645

---

## பிறந்ததின வாழ்த்து



### செல்வன் ஸ்ரீகாந்தன்

R. பாஸ்கரலிங்கம், பஞ்சுளா தம்பதிகளின் அன்புச்செல்வன் ஸ்ரீகாந்தன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று அளவெட்டியில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, இந்திரா அன்ரி, காந்தி அன்ரி, ரேணுகா அன்ரி, கணேஸ் அப்பப்பா, மகேஸ் அப்பப்பா, கைலேஸ் அப்பப்பா, சித்தப்பாமார், சித்திமார் ஆகியோர் பல கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

4642

---

## வெற்றுச்சாக்கு விற்பனைக்குரிய ரெண்டர்

**துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய்.**

எமது சங்கத்தில் ஏறக்குறைய 4500 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு, கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 5/- மணியோடர் மூலமோ நேரடியாகவோ செலுத்திக் கேள்விப் பத்திரப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். 1980-ந் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி வரை சாக்குகளைப் பார்வையிடலாம். தை மாதம் 24-1-80 திங்கள் 12-00 மணிக்கு முன்னர் ரெண்டர் விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் தலைவர், துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபால் மேல் உறையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- கட்டப்படல் வேண்டும். இப்பணம் திருப்பி வழங்கப்படும்.

25-1-80-ந் திகதி விண்ணப்பங்கள் யாவும் உடைக்கப்பட்டுக் கூடிய கேள்விகாரருக்குக் கொடுக்கப்படும். கூடிய கேள்விக்காரர் உடனடியாக 1/3 கேள்விப்பணத்திற்குக் குறையாமல் கட்டி மிகுதியை 28-1-80க்கு முன்பு கட்டிச் சாக்குகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இப்படிக்கு
**ஆ. மா. பூபாலசிங்கம்,**
தலைவர்,
துணுக்காய்ப் பகுதி
பல நோ. கூ. சங்கம்.

4644

---

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சி. எல். 3514 இல. உடைய Nash Ambassdor (6 சிலிண்டர்) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 54, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 4621

EL 5600 தொடர் இலக்கமுள்ள Ford Consul கார் விற்பனைக்குண்டு. 'முருகன் பதி', வைரக ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 4611

டியூட்டறிக்குத் தேவையான தளபாடங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. செந்தில்நாதன், 38, கில்னர் லேன், யாழ்ப்பாணம். 4649

## தவறிவிட்டது

125 CC Vespa Scooter இற்குரிய Silencer யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் வல்லையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும்விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும், தகுந்த சன்மானம் வழங்கப்படும். Bond Institutes, Hospital Road, Jaffna 4650

**FOR SALE**

Pioneer - Stereo Phonic Music Centre' Three-in-One. Brand New for Sale. Thamboe Navalar Walavu, Library Lane, Kalviankadu, Jaffna. 4622

Brownson

**வாங்குங்கள் பிரவுண்சன் அரறூட்-மா**

பிரவுண்சன் அரறூட் மா
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

## தேவை

கடைச்சல் யந்திர இயக்குநர் (Lathe man) கடைச்சல் யந்திர வேலையிலும், யந்திர பழுதுபார்த்தலிலும் ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம், வயது: 25-35, சம்பளம் பேசி முடிவுசெய்யப்படும். ஏற்கனவே வேலைசெய்தவிபரங்களோடும் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களோடும் 18-1-80க்கு முன் கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4617, C/o ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 4647

றபர் சீல் செய்யுமிடத்தில், ஆங்கிலம் தெரிந்த (பெண்) உதவியாளர் தேவை. வயது முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 'பேர்வின்ஸ்', 91/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 4643

வட அபெரிக்காவிலுள்ள இலங்கைத் தமிழருக்கு வீட்டு வேலையையும், ஒரு வயதுப் பிள்ளையையும் பராமரிக்கக் கூடிய, அனுபவமுள்ள, 22-45 வயதுக்குட்பட்ட பெண் உதவியாள் தேவை: சம்பளத்திற்கும்விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 4651

நாவாந்துறை கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் வைத்தியசாலைக்கு ஆயுள்வேத பெண் வைத்தியர் தேவை. விரும்பியவர்கள் நேரிலோ கடிதமூலமாகவோ தொடர்பு கொள்ளவும். டாக்டர் N. இராசதுரை, பெடிக்கல் சென்ரர், 82, கடற்கரைவீதி, நாவாந்துறை. 4654

ஒன்பதாம் வகுப்பு மாணவனுக்கு விஞ்ஞானம், கணிதம் சொல்லிக்கொடுக்க பொறுப்புள்ள ஆசிரியர்/ஆசிரியை தேவை. தயவுசெய்து உடன் விண்ணப்பிக்கவும். வி. சுரேந்திரராசா, 16/4, சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 4646

## பயிற்சி

நாடக, அரங்கக் கல்லூரியால் நடிப்பு, நெறியாள்கை, பிரதியாக்கம், ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகிய அனைத்திலும் பயிற்சி அளிக்கப்படும். ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) பாட நெறிக்கேற்பவும் பயிற்சிகள் அளிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 15- 1- 80. செயலாளர், நாடக, அரங்கக் கல்லூரி, "தாயகம்" திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 4618

3 மாதங்கள் சனி ஞாயிறு மட்டும் நடைபெறும். மோட்டார் மெக்கானிக், மின்னியல் றேடியோ டெலிவிஷன் பயிற்சிகள் 18-01-80 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11 B மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம், 4619

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், றேடியோ (Transistor) Building Technology, PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

## வகுப்புகள்

LLB-First in Laws. சட்ட முதற் பரீட்சை 1980/81. கொழும்பு, யாழ். முன்னணி விரிவுரையாளர்களால் 5-1-80 தொடக்கம் நடாத்தப் படுகின்றது. அச்சடித்த குறிப்புகளுடன் முதல் மாத வகுப்புக்கு சகல மாணவர்களும் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். Cantabia Institute 166, Hospital Road, Jaffna. 4630

---

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.

### 1. சாக்கு கொள்வனவு (கேள்விப்பத்திரம்)

எமது சங்கம் நெற் கொள்வனவுக்காக வெற்றுச்சாக்குகள் கொள்வனவு செய்ய இருப்பதால், தங்கள் கூறுவிலைகளை தரமும், விலையும்பிரித்து, கீழ்க் காணும் விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

### 2. நெல் தூக்குக்கூலி கேள்வி விண்ணப்பம்

எமது சங்கக் கிளைகளிலிருந்து 3புசல், 2 1/2 புசல் நெல் மூடைகளை வாகனங்களுக்கு ஏற்றுவதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காணும் விலாசத்துக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

விண்ணப்ப முடிவுதிகதி: 20-1-1980.

### 3. நெற்கொள்வனவுக்கு வாகனங்களைப் பதிவு செய்தல்

எமது சங்கக் கிளைகளிலிருந்துநெற்களஞ்சியங்களுக்கு நெல் ஏற்றிச் செல்வதற்காக தங்கள் வாகன இலக்கங்களை 20-1-1980 க்குப் பிந்தாமல் காரியாலய வேலை நேரத்தில் சங்கத்தில் பதிவுசெய்துகொள்ளலாம். கூலி விபரங்களுக்கு நேரில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். பதிவுசெய்த வாகனங்கள் மட்டுமே நெல் கொள்வனவுக்கு உபயோகப் படுத்தப்படும்.

தலைவர்.
கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்.

4637

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போகட்டும் ஆயிரம் ரூபாய்!

கி. முகிலன்



ஆபிஸ் முடிந்து வீட்டுக்கு வந்ததும் எனக்கு கையும் ஓட வில்லை. காலும் ஓடவில்லை

தவறு என்னுடையது தான். என்னதான் அவசரமாக இருந்தாலும். இப்படி அசட்டையாக நடந்து கொண்டிருக்கக் கூடாது.

எப்படா ஒரு தவறு செய்வேன் என்று எதிர்பார்த்து கண்ணில் எண்ணெயை. ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள் ஆபிஸர்கள்.

வேலையில்லை என்று சொல்லி விட்டால்......எனது பத்து வருட சர்விஸும் என்னாவது. திருட்டு பட்டமல்லவா கட்டி விடுவார்கள்.

மனதைப்போட்டுக் குழப்பிக் கொள்கிறேன்.

'(இவனுக்கு என்ன நடந்து விட்டது. வீட்டில் எல்லாரும் துக்கம் விசாரிக்கிறார்கள்.

ஆபிஸ் காசை 'பேங்கில்' போடப்போனேன் ஆபிஸில் அவசரவேலை காரணமாக ஏதோ ஞாபகத்தில் 'பேங்கில்' பணம் போட்டதற்கான ஒரு 'சிலிப்'பை வாங்கவில்லை. அதற்காக மனேஜர் பேசியது......!

உண்மையை சொல்லிவிடலாமா? எப்படி சொல்வது?

மனேஜர் 'எங்கே சிலிப்' என்று கேட்டபோதுதானே எனக்கே புரிந்தது. பணம் போட்ட மூன்று சிலிப்புகளுக்குப் பதிலாக இரண்டுதான் வாங்கி வந்திருக்கேன் என்று.

'மறந்து விட்டேன் என்று திரும்பவும் பேங்குக்கு ஓடினேன். மணி ஒன்றரையை தாண்டிவிட்டிருந்ததை 'பேங்க்' 'கேட்'டுக்கு அருகில் போகும்போதுதான் புரிந்தது,

மனம் 'திக்திக்' கென்று அடித்தது. இனி உள்ளேயும் நுழைய முடியாதே?

ஒரு ரூபாயா இரண்டு ரூபாயா சுளையாக ஆயிரம் ரூபாய். மற்ற இரண்டு சிலிப்புகளுக்கும் உள்ளதொகை ஐநூறுக்கும் குறையத்தான்.

''நாளைக்கு பேங்கில் போய் முதல் வேலையாக 'சிலிப்'பை வாங்கிவிடுவது அதற்கிடையில் யாருக்கும் சொல்லிக்கொள் ளக்கூடாது'' என்று தீர்மானித்துவிட்டேன்.

வீட்டில் அம்மாவிடம், இலேசாக தலையிடி என்று மழுப்புகிறேன்.

என்னடா இந்த நாளைக்கு உனக்கு பெண் பார்க்க போகிறோம். இன்னைக்கு தலையிடிங்கிற......?

நாளைக்கு என்னால வரமுடியாதம்மா? வேறொரு நாளைக்குப் போவோம். எனக்கு முக்கியமான வேலையிருக்கு......!

அதென்னடா இதைவிட முக்கியமானவேலை. நாளைக்கு லீவு வேணுமின்னு இன்னைக்கு கேட்டுவரச் சொன்னேனே? லீவு தரமாட்டேனுட்டாங்களா? நீ பெண் பார்க்கப் போற விஷயத்தை சொல்லியுமா உனக்கு லீவுதரமாட்டேனுட்டாங்க?

உங்க ஆபிஸுல ஒரு நல்லது கெட்டதுக்கு லீவுதரமாட்டாங்களே! தெனம் வேலை... வேலை...என்னதான் அப்பிடி வெட்டி முறிக்கிற வேலையோ தெரியல...!

''ஞாயிற்றுக்கிழமை போனு போச்சு......'' என்று சொல்கிறேன். நாளை வெள்ளிக்கிழமை மட்டும் தான் 'பேங்க்' திறந்திருக்கும். பிறகு திங்கள் தானே!

''ஞாயிற்றுக்கிழமையா...... ஞாயிற்றுக்கிழமையில ஒரு வீட்டுல போய் கையை நனைக்க கூடாதுடா?''

'சரிம்மா நாளைக்கு அரை நேரம் லீவு எடுத்துவாரேன்''

''காலையிலே ஆபிஸுக்குப் போய் முழுநாளும் வரமாட்டேனு சொல்லிட்டு வா...!''

எப்படி லீவு கேட்கிறது...!

''நாளைக்கு காலையிலே வந்து பேப்பர்களை கொடுத்துவிட்டு, முதல் வேலையா 'பேங்கு சிலிப்பை, வாங்கிவந்திடு, இல்லாவிட்டால்...நான் ஹெட் ஆபிஸுக்கு அறிவிக்க வேண்டி வரும்'' மானேஜர் கண்டிப்பாக வேறுசொல்லி விட்டார்.

ஹெட் ஆபிஸுக்குச் சொல்லிவிட்டா போதும் வேறு வினை தேவையில்லை.

ஹெட் ஆபிஸ் கொழும்பில் இருக்கிறது. அங்குதான் கடந்த பத்து வருஷமாக வேலைசெய்தேன். திடீரென்று பெண் ஊழியர்களுக்குச் சம்பளம் கூட்டப்போய், எங்களுக்கும் சம்பளத்தைக் கூட்டித் தாங்கனு கேட்டுக் கடிதம் ஒன்று எழுதியதற்காக அங்கிருந்தால் மற்ற ஊழியர்களையும் கெடுத்துவிடுவாள் என்றுதான்-யாழ். கிளைக் கந்தோருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

திரும்பவும் இங்கிருந்து ஏதாவது 'கம்ப்ளேண்ட்' போனால்...வேலைக்கு அரோகராதான்.

●

வெள்ளிக்கிழமை.

காலை ஐந்து மணிக்கே வேலைக்கு ஆஜராகிவிட்டேன்.

ஹெட் ஆபிஸிலிருந்து வந்த பேப்பர்களை எல்லாம் பிரித்து சில 'ரூட்'டுகளுக்கு பஸ்ஸில் அனுப்பிவிட்டு 'ஸ்டீட்செல்லர்ஸ்'களுக்கும் கொடுத்து மூடிய மணி எட்டரையாகி விட்டது.

'ரவ்வாக' கணக்குப்பார்க் கையில் ஐம்பது பேப்பர் கையைக் கடித்தது.

'பேங்க்' அலுவலை முடித்த பிறகு கணக்குப்பார்க்கலாம்.

ஐம்பது பேப்பரைவிட ஆயிரம் ரூபாய் பெரிதாயிருக்காதா பின்னே!

●

ஒன்பது மணிக்கு பேங்க் திறக்கப்படுகிறது.

முதல் ஆளாக 'கேஸ் கவுண்டரில்' நின்றேன்.

என்ன இருந்தாலும் 'பேங்கில்' அவர்கள் வேலைகளைக் கவனித்து...அவரவர் 'சீட்டு'க்கு வர மணி ஒன்பதரையையும் தாண்டிவிடுகின்றது.

இதோ நானிருக்கும் 'கவுண்டரு'க்கு சிரித்துக்கொண்டே வருகிறாள் அவள்.

யாரோ அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள்...

குட்மோர்னிங்...சுமதி.

'குட்மோனிங்' சிவா.

அவள் வந்து 'சீட்டில்' அமர்வதற்குள் நான் வேண்டிக்கொள்ளாத தெய்வங்களே இல்லை.

வழமையாக என்னைக் கண்டதும் தவழும் புன்சிரிப்பு இல்லை. கண்களை சுருக்கி வாயை ஒருவகையாகச் சுழித்து 'என்ன வேண்டும்' என்றாள்.

நேற்றுப் பணத்தை 'டிப்போஸிட்' பண்ணிட்டு அதற்கான ஒரு 'சிலிப்' ஒன்றைத் தவறிவிட்டுவிட்டு போய்விட்டேன். அதை...!

'சிலிப்'பை எடுத்துக் கொண்டு போகாதது உங்கள் தவறுதானே.

'......'

'சிலிப்பைக் காணவிட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வது.

பார்த்துத் தந்தால் உதவியாயிருக்கும்.

எனக்குப் பின்னால் 'பணம்' போட வந்தவர்களின் எண்ணிக்கை கூடுகிறது.

அவர்களுக்கு இடம்விட்டு ஒதுங்கிக்கொண்டேன்.

மீண்டும் தலையை நீட்டுகிறேன்.

என்னைப்பார்த்த சுமதிமுகத்தைத் திருப்பிக்கொண்டு பக்கத்தில் 'கண்ணாடியறைக்குள்' இருப்பவரோடு ஏதோ பேசுகிறாள்.

'எவ்வளவு அசட்டை.'

நான் 'கவுண்டரை' விட்டு நகரவில்லை.

'எப்போ 'போட்டீங்க.'

'நேற்று.'

'எமொண்ட்'

'ஆயிரம் ரூபாய்... எக்கவுண்ட் நம்பர் விலாசம் எல்லாம் சொன்னேன்.

'கொஞ்சம் இருங்க...'

நேரம் பதினொன்றரையை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

பக்கத்துச் சீட்டில் இருப்பவரோடு வளவளா என்று கதைத்துக்கொண்டிருக்கிறாள். அவள் அக்காவைப் பெண் பார்க்க வருகிறார்களாம். இன்னைக்குத் தனக்கு லீவு கொடுக்கலையாம். 'சோர்ட்' லீவாவது போகனுமாம். ...பாவம்...!

'மிஸ்...ரொம்ப நேரமாய் நிக்கிறேன்.

அவள் முகம் 'கவுண்டர்' பக்கம் திரும்புகிறது.

'சிலிப்பை' விட்டுவிட்டு போனால் நேற்றே வந்து கேட்பதற்கென்ன?'

'நேற்று வரும்போது 'பேங்க்' பூட்டியாச்சு... தயவு பண்ணி...!'

'அக்கவுண்ட்' ... துத்தான் சொல்லவேண்டும்.

அவர் முகத்தில்...பேச்சில் கடுமை தெரிகிறது.

எப்போ மாடிக்குப் போவாள்... என் அவசரம்-அவசியம் அவளுக்குத் தெரிய ஞாயமில்லைத்தான்.

அவளையே பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

அவள் என்னைப் பார்ப்பதாக இல்லை.

டெலிபோன் மணி அடிக்கிறது.

அவளுக்குத்தான் யாரோ பேசுகிறார்கள்.

பத்து நிமிஷம் டெலிபோனைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறாள். என்ன சம்பாஷணையோ?

சிரித்துக்கொண்டே கவுண்டருக்கு வருகிறாள்.

நான் அசடு வழியச் சிரிக்கிறேன்.

காசைப்போட்டால் கவனமாக நின்று 'சிலிப்பை' வாங்கிக்கொண்டு போவதுதானே.

'தவறுதான். தவறுதான் நடந்துவிட்டது. அதற்குப் பரிகாரம் ஒன்றும் இல்லையா? திரும்பத்திரும்ப அதையே சொல்லிக்கொண்டிருந்தால்... நீங்களும்தான் 'செக் கவுண்டரில்' இருக்கும்போது ஒரு நாளைக்கு பத்து சிலிப்புகளை கொடுத்துபணத்தைப் போடும்போது உங்கள் அசகாய வேகத்தை அதில் காட்டி குறைந்தது மூனு 'சிலிப்பிலாவது' பிழையாக மெஷினில் பிரிண்ட் பண்ணி தருவீங்களே...அதெல்லாம் தவறு இல்லையா... என்னால் பொறுமையாக இருக்கமுடியவில்லை.

விறுவிரென்று அவள் மாடிக்குப் போவது தெரிகிறது.

என்ன அதிசயம்.

போன வேகத்தில் சுவரில் அடித்த பந்தாக திரும்பி வந்தாள்...

நீங்கள் சொல்ற கணக்கில் நேற்று இரண்டு சிலிப்புகளில் தானே பணம் போட்டிருக்கிறீர்கள்.

'இல்லை மூன்று' 'சிலிப்பில்'

'இல்லையே இரண்டு சிலிப்புக்கான கணக்குகள் தான் பதிவாகியிருக்கிறது'.

சுளையாக ஆயிரம் ரூபாய். பத்து நூறு ரூபா நோட்டுக்களை உங்கள் கையில்தானே கொடுத்தேன்.

'விளையாடுகிறீங்களா...'

'நான் ஏன் உங்களிடம் விளையாடனும்.'

'நீங்கள் என்னிடம் பணம் தரவில்லை. வேறு எங்காவது பண்ணியிருப்பீர்கள்.'

எனக்கு தூக்கிவாரிப்போடுகிறது.

டெலிபோன் மணி அடிக்கிறது.

அவள் ஓடுகிறாள். அதற்கிடையில் அவளுக்கு ஆயிரம் டெலிபோன் கோல்கள்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது.

ஆத்திரம் வந்து யாரை என்ன பண்ணமுடியும்...அதுவும் 'பேங்கில்...!

ஆயிரம் ரூபா......தலையை சுற்றுகிறது.

வேலையையும் நினைக்க முடியவில்லை.

பணத்தை எப்படியாவது கட்டியாகனும். உனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தருகிறேன். என்னத்தை பண்ணியாவது பணத்தை திங்கட்கிழமை கட்டியாகனும்'' மானேஜர்.

அதற்கு மேல் அவர்தான் என்ன செய்வார்.

வேலையும் போச்சு...பணமும் போச்சு......கலியாணம் ஒரு கேடா...!

வீட்டில் அம்மா பயணத்தோடு இருக்கிறா.

உண்மையைச் சொல்லி அவர்கள் ஆசையைக் கெடுப்பானேன். பெண்பார்க்க போக முடிவுகட்டியாயிற்று அவர்கள் வீட்டிலாவது ஏதாவது கொஞ்சம் பணம்புரட்டலாம் என்ற நப்பாசைதான்.

0 0 0

பெண்வீட்டில் ஏகதடபுடல்.

அம்மாதான் எனக்கும் சேர்த்தே ஏதேதோ கதைத்துக் கொண்டிருக்கிறாள்.

நான் ஏதோ பறிகொடுத்தவன் மாதிரி கவலையோடு இருக்கிறேன்.

அவர்கள் வீட்டின் முன்னால் 'டாக்ஸி' வந்து நிற்கிறது.

(4-ம் பக்கம் பாக்க)

## கச்சியப்பர் உவமைநயம்-6

# புதன் மேற்கொண்ட வேட்டுவன்

வ. குகசர்மா

ஒரு திருவிளையாடல் காரணமாகதன்னை என்றும் நீங்கா இன்றவனைப் பிரிந்து இமயமலை அரசன் புதல்வியாகத் தோற்றுகிறார். அவனை ஐந்தாண்டு பருவம் வந்ததும் இறைவனை நோக்கித் தவஞ்செய்கிறார்.

இந்த நேரத்தில் அவரிடம் ஓர் அந்தணர் வருகிறார். ஒளி பொருந்திய சடாமுடி ,விளங்கிய விபூதியின் ஒளி, காவி வஸ்திரம், இவ்வாறு கண்டோரைக் கவரும் சிவவேடம் இவர் திருக்கோலத்தைக் கண்டவுடன் உலக மாதாவாகிய அன்னையும் அவருக்கு ஆசனம் அளித்து மரியாதை செய்கிறார். இறைவரே தொண்டர் உள்ளத்தொடுக்கம் அல்லவா?

ஆனால் அடியார் வாயில் இருந்துவரும் வார்த்தைகளோ அவர் வேடத்திற்கு பொருத்தமற்றது. இடருழந்த இறைவி தாங்கமுடியாமல் காதுகளைப் பொத்திக்கொள்கிறார். இவர் வேறு ஏதோ தவறான காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக இந்தப் பொய்வேடத்தைத் தாங்கி வந்திருக்கிறார் என்று உமையம்மையார் நினைக்கிறார்.

இவ்வாறு பொய்வேடம் கொள்ளுவல் பலர் உலகத்தில் இருந்து வந்திருக்கிறார்கள். இதனால் வள்ளுவர் தமது நூலில் 'கூடா ஒழுக்கம்' என்னும் அதிகாரத்தில் பத்துக் குறள்களால் கடிந்து உரைத்துள்ளார். அவருடைய குறள்கள் யாவும் சிறந்த உவமை நயமுடையதாய் விளங்குகின்றன! இங்கே நாம் எடுக்கத் தேவையான இரு குறள்களை மாத்திரம் காண்போம். முதலாவதாக புறத்தில் செம்மையுடையவராகத் தோற்றினும் உள்ளம் குன்றுமணியின்மூக்குப்போல்கறுத்து இருப்பவர்களையும் உலகம் பெற்றிருக்கிறது என்ற கருத்தமைந்த

'புறங்குன்றி கண்டனைய
ரேனும். அகம் குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து'

என்பது பொய் வேடத்தில் 'அகம் கருமை' பல இலக்கியங்களிலே எடுத்தாளப்பட்டாலும், பெரிய புராணத்தில் மிகச் சிறப்பாக எடுத்து ஆளப்பட்டுள்ளது. மெய்ப்பொருள்நாயனார் என்னும் அரசனை போரில் வெல்லமுடியாத வேற்று நாட்டரசன் அவர் அடியார் பக்தியைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளுகிறான். எனவே அவரைச் கொல்ல நீறு பூசி சிவனடியார் வேடங்கொண்டு உள்ளத்திலே கறுப்புவைத்து வருகிறான்.

'மெய்யெலா நீறு பூசி
வேணிகள் முடித்துக்
கட்டிக்
கையினிற் படைக ரந்த

(4-ம்பக்கம்பார்க்க)

## இதயச் சரங்கம்

என்மனத் தில் உனக்கோர் இடம்பிடித்தாய்-எந்தன்
இதயத்தின் ராகங்களை நீ இசைத்தாய்!
என்மனக் கோலங்களை நீ வரைந்தாய் - எந்தன்
இதயச் சுரங்கத்திலே என்ன பெற்றாய்?

என்மன வெளியினிலே நீபறந்தாய் - எந்தன்
இதயத்தின் தென்றலென நீ தவழ்ந்தால்
என்மன மேகங்களில் வீற்றிருந்தாய் - எந்தன்
இதயச் சுரங்கத்திலே என்ன பெற்றாய்?

என்மன மேடையிலே நடம் புரிந்தாய் - எந்தன்
இதயத்து நாடகத்தில் நீ நடித்தாய்
என்மனக் காவியத்தில் நீ திகழ்ந்தாய் - எந்தன்
இதயச் சுரங்கத்திலே என்னபெற்றாய்?

என்மன ஓடையிலே நீ குளித்தாய் - எந்தன்
இதயக் கடற்கரையில் நீ அமர்ந்தாய்
என்மனக் கதைகளினை நீ படித்தாய் - எந்தன்
இதயச் சுரங்கத்திலே என்ன பெற்றாய்?

– கோப்பாய் எஸ். சிவம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "இந்தியக் கலை வரலாறு-தொடர்ச்சியான மாணவ வாரிசுகளின் வரலாறே"

# இந்தியாவில் இசையும் பண்பாட்டுமாற்றமும்

ஆங்கில மூலம்: கலாநிதி நாராயண மேனன்

தமிழாக்கம்: வி. சிவசாமி எம். ஏ.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்தியாவிலே சமயமும் கலையும் (ஒன்றிலிருந்து ஒன்று) பிரிக்கமுடியாதவை. வழிபடுவோனும் தெய்வமும் ஒரே விதமான அறிவுநிலையைச் சாதிப்பதற்கு ஏதுவான வழிபாட்டுச் சாதனமாகவே கலை மிளிர்கின்றது. வழிபடுவோன் தெய்வமாக மாறும் நிலையிலேயேதான் தெய்வத்தினை வழிபடமுடியுமென்ற கருத்துப் பலருக்கும் தெரிந்ததே. பிரார்த்தனையினை உருவாக்கியுள்ள சொற்களைக்கொண்டுள்ள பாடல் அல்லது தோத்திரப்பாடலைக் கொண்டுள்ளதாலேதான் ஒரு பாட்டு வழிபாட்டுக்குரிய சாதனமாக அமையாது இசையே, ஒலியே நாதமே வழிபாட்டுக்குரிய சாதனமாகின்றது. இசையினை உருவாக்குதலே வழிபாட்டிற்குரிய ஒரு செயலாகும். இவ்வாறே ஏனைய கலைகளும். எனவே கலையின் வடிவங்கள் அனைத்தையும் பற்றிய நோக்கிலே பொதுத்தன்மை காணப்படுவது தவிர்க்கமுடியாததாகும். இவற்றை உருவாக்கும் பொழுது பொதுவான அடிப்படையியல்பு இருப்பதும் இவற்றின் நோக்கத்திலும் ஒரே தன்மை நிலவுவது தவிர்க்கமுடியாததே. இசை, ஓவியம், சிற்பம் ஆகியனயாவும் ஒரே நோக்கத்தினை நோக்கியே செயற்படுவன. எனவே ஒரேவிதமான கருத்துக்கள் பல வடிவங்களிலே திரும்பவும் அமைக்கப்படுகின்றன. ஒரு மரபு பிறிதொன்றில் அப்படியே பெயர்க்கப்படுகின்றது.

எனவே, இத்தகைய கருத்துக்களின் வெளிப்பாடுகளின் நுணுக்கங்கள் மலைத்தேயத்திலுள்ளவற்றிலிருந்து வேறுபட்டவையே. மேலை நாட்டிலே கலைப்படைப்பு எனில் உணர்வினைப் புறவழியிலே காட்டுவதாகும். ஆனால் இங்கு உணர்வு அகவடிவிலே எடுத்துக்காட்டப்படும். புறவடிவிலே காட்டும் போது கலைஞன் வெளியே நின்று செயற்படுகிறான். தனது கலைப்பொருளை உருவாக்குகிறான். ஆனால் அகவடிவிலே நோக்கும்போது அவன் பொருட்களின் மையத்திலுள்ளான். கருத்தின் முதன்மையானுக உள்நோக்குகிறான். அறிவியல் நேர்மைக்கும், உணர்வியல் நேர்மைக்கும், பகுத்தறிவிற்கும் இயல்பூக்கத்திற்கும், செயலுக்கும் இத்தனைக்குமிடையிலான வேறுபாடாகும். குறிப்பாக ஒரு மரபிலே சிந்தனைக்குரிய நிலைமைகள் காணப்படின் ஒருவன் ஒரேவிதமான விடயங்களைப் பற்றி வேறுபட்ட வடிவங்களிலே சிந்திக்கலாம். இஃது கடந்த ஒன்று அன்று. இன்னும் M. F. ஹுசைன் என்னும் ஓவியர் ஒரு தொடர் வரிசையிலான ஓவியங்களையும், ராகமாலை ஓவியங்களையும் தீட்டியுள்ளார். இவற்றில் அவர் தன் முன்னோர்கள் கொண்டிருந்த கருத்துக்களுக்கும், சமகாலக் கலைமரபிலே வடிவம் கொடுத்துள்ளார். எனவே மரபு தொடர்ந்து நிலவுகின்றது.

இன்னிசை மரபுகள் பலவற்றைப்போன்று, இதுவும் வாய்மொழி மரபினையே அடிப்படையாகக்கொண்டது. பாதுகாத்துப் பகுத்தாய்வதற்கு இந்திய இசைக்குறியீடு முறை போதுமானது. ஆனால் இது உடனடியாகப் பயன்படுத்துதற்கும் எழுதுவதற்குமான வகையில் இசையினை முழுமையாகப் பார்த்துப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் வளர்ச்சியடையவில்லை. 'இந்தியக் கலை வரலாறு, தொடர்ச்சியான மாணவ வாரிசுகளின் வரலாறே...வழி வழி இசைக் கலைஞனின் குழுக்களிலே குறிப்புரையும், விரிவாக்கமும் உள்ள மரபுவழியிலான பழைய இசை நிலையங்களிலே பேணப்பட்டுவந்த இசையின் நேரடி வழிவந்ததே தற்கால இசை' என ஆனந்தக்குமாரசாமி குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளற்பாலது.

அலி அக்பர், ரவிசங்கர், அன்னபூர்ண ரவிசங்கர் ஆகியோர் உஸ்ரத் அலவுதீன்-கானின் பெரிய கலைமரபினைத் தொடர்ந்து முன்னேறுகின்றனர். உஸ்ரத்கானின் கலை மரபை விலத்கான் தொடர்ந்து பேணுகிறார்: அரியக்குடி ராமானுஜ ஐயங்காரின் கலை மரபை கே. வீ. நாராயணசுவாமி தொடர்ந்து நிலவச் செய்கிறார். ஒப்புவமையற்ற வீணைகானத்தின் கர்நாடக இசைமரபின் சாராம்சம் பொருந்திய பாணியினை பால சரஸ்வதி, பிருந்தா, முக்தா, விஸ்வநாதன் ஆகியோர் மேலும் வளர்த்து வருகின்றனர். பெரிய அல்லடியகானின் மரபினைக் கேசர்பாய் கேர்கர் பேணுகின்றார், முன்னவர் அலிகான் தந்தை பதே குலாம் அலிகானின் கலைமரபைப் பின்பற்றுகிறார்.

### கற்பித்தல்:- குருவும் சிஷ்யரும்

இவையாவும் குருகுல முறையிலான மரபுவாழ் இசைக் கல்வி மூலம் கற்பிக்கப்படுகின்றன. குரு எனும் பதம் குறிப்பிடப்பாலது. அவர் ஆசிரியரிலும் மேலானவர். அவர் ஆசாரபூர்வமான ஆசான். சிஷ்யன் குருவிடம் முறைப்படி பயிற்சிபெறுவான். அவருடன் வாழ்ந்து, பிரயாணம் செய்து, நெடுங்காலமாகத் தொடர்ந்து அவருக்குச் செவிசாய்த்துச் சிறிது சிறிதாக அவரிடமிருந்து கலையினைக் கசடறக் கற்றுக்கொள்வான். குரு, சிஷ்யனுக்கு வடமொழி, இலக்கணம், வரலாறு முதலியவற்றினை கற்பிப்பார். இவ்வாறு குருவும், சிஷ்யனுக்குமிடையிலே எப்பொழுதும் தொடர்பு நிலவிற்று. உண்மையாகத் தொடர்ச்சியான பரஸ்பர நல்லுறவு நிலவிற்று. இசைக் கோட்பாட்டினையும் கற்பது மட்டுமன்றி வர்ழ்க்கைமுறையொன்றினை ஏற்றுக்கொள்வதையும் இது கருதிற்று.

குருகுலக் கல்விமுறை போற்றத்தக்கவகையிலே நெடுங்காலமாக இந்தியாவிலே நிலவிற்று. ஆனால் தற்பொழுது சமூக அமைப்பு விரைவாக மாறிக்கொண்டிருக்கிறது. அத்துடன் இத்தியரின் வாழ்க்கைமுறையும் மாறிக்கொண்டிருக்கிறது. பாம்பாய், புதுடில்லி அல்லது கல்கத்தா போன்ற நகரங்களில் இம்முறை இன்று காலத்திற்கு ஒவ்வாத ஒன்ருகத் தென்படலாம்' மாற்றமற்ற மானிய அமைப்புச் சமூகம் உயிர்த்துடிப்புள்ள ஜனநாயக நாடாக விரைவில் மாறிக்கொண்டிருக்கும் மாறுகால கட்டத்திலே வாழுகின்றோம், மாட்டுவண்டியின் இடத்தினை 'ஜெட்' விமானம் பெற்றுக்கொண்டிருக்கிறது. மன்னர் அல்லது உயர் வர்க்கத்தினரன்றி பொதுமக்களே இன்றைய இசையின் புரவலர். பணம்படைத்த புரவலரின் சிறிய அறைகளின்றிக் கலை மண்டபங்களே இசைக்கலையின் புதிய அரங்கமாகும்.

ஆனால் இம்முறையின் (பழையமுறை) இயல்பிலேயே சில குறைபாடுகள் உள்ளன. குருவில் மிக்க ஈடுபாடுள்ள சிஷ்யன் அவரின் சிறப்பியல்புகளை மட்டுமல்றிச் சில குறைபாடுகளையும் பின்பற்றுவான். மேலும் இம்முறையினுல் சிஷ்யன் பரந்த பொது அறிவினைப்பெற முடியாதுள்ளான். (காலத்திற்கேற்ப) இசைக்கலையிலேற்படவேண்டிய மாற்றங்களை நன்கு உணராது தலைமுறைதலைமுயையாகப் பாடநூல்களைக் கடுமையாகப் பின்பற்றுதல் பிறிதொரு அபாயமாகும். இம்முறையினுல் சிஷ்யன் தனது குரு தவிர்ந்த பிற இசைக்கலைஞர் ஆசிரியர் ஆகியோரிலிருந்து தனிப்படுத்தப்படுகிறான். இது ஒருவகையானஒருதலைச்சார்பான பற்றினை ஏற்படுத்தும். இதனுல் பகுத்தறிவு, இசைத்திறன் ஆகியனவற்றிலும்பார்க்க (குரு) விசுவாசமேமேலோங்கும். இம்முறையினுலே மாணவிகள் குருவினைப்பின்பற்றுதல் கஷ்டமாகும்.

அவ்வாருயினும் குருகுல முறைப்படி ஏற்படக்கூடிய குரு-சிஷ்யத் தொடர்பிற்குப் பதிலாகப் பிறிதொரு திருப்திகரான கல்விமுறை இருந்ததில்லை; இன்றுமில்லை.

ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும், உலகின் பிறபாகங்களிலும் பாடசாலை, பல்கலைக் கழகங்கள் ஆகியனவற்றில் இசைக்கல்விபற்றிய பிரச்னைகள் இசைக் கலைஞர், கல்வி நிபுணர்கள், உளநூலாசிரியர் ஆகியோரின்கவனத்தை நெடுங்காலமாக ஈர்த்துவந்துள்ளன. இந்தியாவில் இத்தகைய நிலையினை இப்போது தான் எதிர்நோக்கத்தொடங்குகிறோம். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இத்தகைய கல்விக்கு ஒரு நியாயமான திருப்திகரமான தீர்வு காணப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவன் தான் விரும்பும் இசைத்துறையிலே சிறப்புப் பயிற்சியும் மனிதப் பண்பியல் பாடங்களிலே பொதுக் கல்வித்தேர்ச்சியும் பெறமுடியும். ஆனால் இந்தியாவில் இதனைத் திருப்திகரமாச் சாதிக்கமுடியவில்லை. ஆபிரிக்காவிலும். ஆசியாவிலும் நேர்த்தியான இசை மேம்பாட்டுணர்ச்சியுள்ள கோடிக்கணக்கான பிள்ளைகள் உள்ளனர். பல வேறுபட்ட மொழிகளைப் பேசுவதுபோல அவர்கள்மூலமாகத் தமக்கேயுள்ள இசைச் சூழலிலும் இசை மரபுகளிலும் தோய்ந்து வளர்ந்தவர்கள். அவர்களுடைய இயற்கையான உள்ளார்ந்த இயல்புகளைப் பாதிக்காவகையில் அவர்களின் இயல்பான திறமைவளர நாம் துணைசெய்யவேண்டும். வளர்ச்சி அவர்களின் சமூகச் சூழலையொட்டியதாகவோ அல்லது அவர்களின் மரபுவழியான கல்வி வட்டாரத்திற்கு ஏற்றதாகவோ அமையவேண்டும். எனவேகுறிப்பிட்ட எல்லைக் குட்பட்டவர்களாகவோ அல்லதுபழமையில் அமிழ்ந்தித் தனிப்படுத்தப்பட்டவர்களாகவோ அல்லது சுருங்கிய கருத்துணர்வு கொண்டவர்களாவோ அவர்கள் இருக்கவேண்டுமென நான் ஆலோசனைகூறவில்லை. அவர்கள் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் தமது சூழ்நிலையிலே தம்மை வெளிப்படுத்த நாம் அவர்களுக்குத் துணைசெய்யவேண்டும். மரபுவழியான கல்விமுறைகளைச் சீராக்கி, வலுப்படுத்தி அவற்றைப் பகுத்து நன்கு ஆய்வதன் மூலமே கல்வியினைக் கற்பிக்கவேண்டும். பிள்ளைகளின் இயல்பான உள்ளப்பாங்கினைக் கடுமையாகவும், இயற்கைக்கு மாருகவும் தாக்கவல்ல அந்நிய முறைகளைத் திணிக்கும் வகையிலே கல்வி கற்பித்தல் அமையக்கூடாது.

(அடுத்தவாரம் தொடரும்)

## தையெனும் நங்கை

விண்மிசை பரிதி காலை
விளங்குசெவ் வண்ணம் காட்ட
மண்மிசை யெழுநெற் கதிர்கள்
வளைந்தசைந் தழகு செய்ய
பண்ணிசை வண்டு பாட
பாவையர் கோலம் போடத்
தண்ணென வாடை வீசத்
தையெனும் நங்கை வந்தாள்

கோலமார் நெற்றி தன்னில்
குங்குமப் பொட்டு மிட்டு
ஏலவர் கூந்தல் சேர்த்து
எழில்பெற முடித்துக் கட்டி
சீலமார் கும்பம் வைத்து
செம்மலர் விளக்கும் தந்து
ஞாலமார் பொங்கல் செய்யத்
தையெனும் நங்கை வந்தாள்

- வ. குகசர்மா

## பானை வெடி!



பொங்கல் ஸ்பெஷல்

-செல்வன் வி. சந்திரகுமார்

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்களை கூர்மையாக்கிக் கொள்கிறேன்.

சுமதி!... 'பேங்க்' சுமதியே தான்.

பெண்ணின் தங்கையாம்... யாரோ சொல்வது எனக்கு கேட்கிறது.

'அம்மா புறப்படுங்கள்...... எனக்கு இந்த கலியர்ணத்தில் இஸ்டமில்லை...' அம்மாவின் கையை இழுத்துக்கொண்டு வெளியே வருகிறேன்.

'போகட்டும் ஆயிரம் ரூபாய்...' சுமதி காதில் விழும்படியாக கூறிவிட்டு விரைகிறேன்.

சுமதி சிலையாக நிற்பது தெரிகிறது. (யாவும் கற்பனை)

## புதன் மேற்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுற் கறுப்பு
வைத்துப்
பொய்தவ வேடங்கொண்டு
புகுந்தனன் முத்திநாதன்'

இங்கே 'மை பொதி விளக்கு, எனச் சேக்கிழார் உவமை காட்டும் நயம் அறிந்து மகிழ்தற்குரியது.

திருவள்ளுவர் காட்டும் மற்ருெரு உவமை

'தவமறைந்து அல்லவை
செய்தல், புதன்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்
தற்று'

என்பதாகும். தவவேடத்தின் கண்ணே மறைந்து அல்லாதவற்றைச்செய்தல்வேட்ண்வன் புதலின்கண்ணே மறைந்து நின்று புட்களைப் பிணித்தாற் போலும் என்பது இக்குறளின் கருத்து.

இந்தக் குறளின் கருத்தை மிகத் தெளிவாக உமையம்மையார் வயிலாக எடுத்தாண்டிருக்கிறார் கச்சியப்பர்.

'அந்தணரே உமது வேடத்திற்குத் தக்கதாக உமது மனம் அந்த மனம் இருள் மண்டிக் கிடக்கிறது. எமது தலைவராகிய சிவபெருமானிடத்திலே உமக்கு அன்பு சிறிதேனும் இல்லை. காட்டிலே உள்ள பறவைகளைக் கவரும்படி வேண்டுவன் புதரில் மறைந்து தம்மைப் புதர்தான் என்று காட்டிக்கொள்வது போன்றது உமது தன்மை என்று உமையம்மையார் கூறுகிறார்.

ஒருவேளை தன்னைக் கவரும்படிதான் பொய்மறை வேடத்தோடு வந்தாரோ என்று கருதுகிறார். அவர் சந்தேகம் சரியாகவும்விடுகிறது. சிவபெருமானே அவரிடம் வந்தவர் என்று தெரிந்ததும் எம்மனம் ஆறுதலடைந்தாலும் அவர் கூறிய உவமை கற்றோர் மனதை விட்டகலாது. அந்தச் சிறந்த செய்யுளை இங்கு பார்ப்போம்.

'கேட்டியால் அந்தணை
கேடிலா எம்பிரான்றன்
மாட்டொரு சிறிது மன்பு
மனதிடை நிகழ்ந்த
தில்லை
காட்டுறு புள்ளின் சூழல்
கவருவார் புதன்மேற்
கொண்ட
வேட்டிவன் இயல்போல்
மேலோன் வேட நீ
கொண்ட தன்மை.'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பேரறிஞர் சேர் பொன்.அருணாசலம்

## 1853 - 1924

**வரலாற்றுவாணர் வை. முத்துக்குமாரசுவாமி**

(இலங்கையின் மாபெரும் அரசியல் ஞானியும் பல்துறை அறிஞருமான சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் மறைந்த 56-வது நாள் கடந்த 9.ம் திகதி இடம்பெற்றது அப் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றினை சுருக்கமாக வரலாற்றுவாணர் திரு. வை.முத்துக்குமாரசாமி லண்டனிலிருந்து எழுதுகிறார்.)

சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் ஈழநாட்டிலே தமிழர் செய்த தவப்பயனாக உதித்த பேரறிஞரும், மாபெரும் அரசியல் ஞானியும், தலைசிறந்த ஆட்சியாளரும் சமூகப் பணியாளரும், கல்வி மேதையும், இலங்கைப் பல்கலைக் கழக இயக்கத்தின் தந்தையும் ஆவர். அவர் குணக்குன்று. அவர்களுடைய புகழ் மேதினியில் காலச் சக்கரம் சுழன்று பல்லாண்டுகள் சென்றும் ஒளிர்விடுவதை நாம் பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணம் மானிப்பாய் பொன்னம்பலம் முதலியார் தம்பதிகள் 1853ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ந் திகதி வரப்பிரசாதமாகப் பெற்ற மூன்றாவது மகனே அருணாசலம் ஆவர். அவருக்கு மூத்தோர், குமாரசுவாமி, இராமநாதன் எனப் புகழ் வாய்ந்த இரு தகைமைவாய்ந்த பெருமக்கள்.

இளம் வயதில் அருணாசலம் கொழும்பு அக்கடெமியில் கல்வி பயின்றார். அதுவே இன்று றோயல் கல்லூரி எனப் படுகின்றது. புலமை மிக்க மாணவருக்கு அளிக்கப்படும் உதவிப் பணஉதவி அவருக்குக் கிடைத்தது. அன்றைய அரசு அளித்த ''ரேணர் பரிசிலை'' அவர் பெற்றனர். அக் கல்லூரித் தலைவர் டாக்டர் பார்க்கிறெஃப்ற் போக் அவர்கள் அருணாசலம் பற்றி 'நான் நாற்பது ஆண்டுகளாக இளம் மாணவர்களுக்கு கல்வி ஊட்டுவதில் ஈடுபட்டிருந்தேன். ஆயினும் இதுவரை அருணாசலம் போலத் திறமைமிக்க மாணவரைச் சந்திக்கவில்லை'' என்று பாராட்டினார்.

அவர் 1870-ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள ஆங்கிலப் பல்கலைக் கழகத்துள் ஒன்றில் சேருவதற்குபுலமைக்கு அருகையாவதற்கு உதவப்பட்ட உதவிநிதியைப் பெற்றனர். அன்று இலங்கை வித்தியா கர்த்தராக விளங்கிய சேர் உவால்ரர் செணடோல் அவர்களின் ஆலோசனைப்படி, அருணாசலத்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக் சழகத்தைச் சார்ந்த கிறைஸ்ற் கல்லூரிக்கு அனுப்பப்பட்டார் அங்கு அத்திவாரக் கல்வி உதவிபெறும் மாணவராகச் சேர்க்கப்பட்டார்,

### இங்கிலாந்தில் உயர்தரக் கல்வி

கல்வியில் மேன்மை பெற்ற கேம்பிரிஜ் கிறைஸ்ற் கல்லூரியில் அருணாசலம் கணிதஇயல், மேல்நாட்டுக் காவியங்கள், லற்றின், கிரேக்க மொழி ஆகியவற்றில் ஆற்றல் மிக்க மாணவனாக விளங்கி, கலைமானித் தேர்வில் சிறப்புச் சித்திபெற்றார்.

### கேம்பிரிட்ஜில் ஒரு சம்பவம்

1874-ம் ஆண்டு ஒருநாள் கிறைஸ்ற் கல்லூரியில் அருணாசலம் கல்வி பயிலும் பொழுது, யோர்க் நகரத்து புரட்டஸ்த்தாந்து மதத்து விஷப்பாண்டவர் (சிரேட்ட அத்தியட்சகர்) ஒரு சொற்பொழிவு ஆற்றினார். அப்பொழுது இந்துசமயம், பௌத்த சமயம் ஆகிய கீழைத்தேசச் சமயங்களைப் பற்றி அந்த விசுப்பாண்டவர் இழிவாகக் குறிப்புரை பகர்ந்தனர். அதற்கு உறைப்பான கண்டனம் அருணாசலம் ''ஸ்பெக்டேட்டர்'' என்னும் உயர்தர ஆங்கில ஏட்டுக்கு அனுப்பினார். அது அவ்வேட்டில் துல்லியமாக வெளியிடப்பட்டது.

### முதல் இலங்கையர்

1875-ம் ஆண்டு லண்டனில் இலங்கை உயர் அரசாங்க சேவைப் பரீட்சையை ஆங்கில அரசாட்சியர் நடாத்தினர். அருணாசலத்தை அப் பரீட்சையை எடுக்கும்படி அவர் தாய் மாமனார் சேர். முத்துக்குமாரசுவாமி தூண்டினார். பறிஸ்ரர் (வழக்கறிஞராக) வேண்டும் என்னும் சொந்த விருப்பத்தை மனதில் அடக்கிக்கொண்டு மாமனார் சொல்லை மதித்து அருணாசலம் அந்த 'சிவில் சேவிஸ்ப் பரீட்சையை எடுத்தார். அதில் முதலாவதாகத் தேறிய இலங்கை வேட்பாளர் அருணாசலம். பின் இலங்கை அரசாங்க உயர்சேவையைப் பெறுவதற்கு இலங்கைக்கு அருணாசலம் அவர்கள் கப்பலில் புறப்பட்டனர்.

### உத்தியோகச்சிறப்பு

இலங்கையில் பொன் அருணாசலம் அவர்கள் கொழும்பில் உள்ள 'கச்சேரி' அல்லது அரசாங்க அலுவலகத்தில் ஏப்ரில் 1875 தொடக்கம் உதவி மாகாண அதிபதியாக ஓர் ஆண்டு கடமை ஆற்றினார். அதன் பின் கண்டிமா நகரத்து கீழ் கோட்டு (பொலிஸ் கோட்டு) நீதிபதியாக நியமனம் பெற்றார். அக்காலத்தில் 'சிவில் சேவிஸ்' உத்தியோகத்தர்கள் நீதிமன்றங்களில் கடமைஆற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டனர்.

### நீதிமன்றங்களின் பணி

பொன். அருணாசலம் அவர்கள் முதல் கீழ்கோட்டு நீதவானாக இருந்தாலும் விரைவாக மேல்கோட்டு நீதிமன்றங்களில் நீதி ஆணையாளர்களாக கல்பிட்டி, புத்தளம், மாத்தறை, அவிசாவெலை, பஸ்யாலை, மாத்தளை, களுத்துறை ஆகிய இடங்களில் பணி ஆற்றினார். மாவட்ட நீதிபதியாக சிலாபம்,கேகாலை, களுத்துறை, குருநாகல், மட்டக்களப்பு ஆகிய பல நகரங்களிலும் பணியாற்றினார்.

மாத்தறையில் கீழ்கோட்டு (பொலிஸ்) நீதவானாகக் கடமை ஆற்றும் பொழுதே அருணாசலம் அவர்கள் தமது முழு ஆற்றலையும் காட்டினார். 1879-ல் இலங்கையின்சிரேஷ்ட நீதிபதிகளுள் ஒருவராக விளங்கிய சேர் ஜோன் (B) பட்டீபியர் அருணாசலத்தின் திறமையை நன்கு உணர்ந்து [illegible] ஓய்வுபெறமுன், அருணாசலம் அவர்களைப் பற்றிய பாராட்டல்களை குடியேற்றநாட்டுக் காரியாலயஅதிகாரிக்குஅனுப்பி வைத்தார்.

1886 ம் ஆண்டு அருணாசலம் அவர்கள் மட்டக்களப்பில் மாவட்ட நீதிபதியாகக் கடமை ஆற்றிக்கொண்டிருந்தார். அப்பொழுது அக்காலத்தில் இலங்கைத் தேசாதிபதி சேர். ஆதர் கோர்டன் அவர்கள் பொன். அருணாசலம் அவர்களை அப்பொழுது காலியாக வந்த பதிவுத் திணைக்களத்து மா அதிகாரியாகவும் அரசாங்க வரிகள் வசூலிக்கும் ''பிஸ்கால் அதிகாரியாகவும் நியமனம் செய்தனர். அவர் அனுபவம் வாய்ந்த முப்பது அரசாங்க உயர்சேவை உத்தியோகத்தர்களுக்கு மேல்உயர்த்தப்பட்டனர். ஆகவே அந்தச் சிவில் சேவிஸ்ஸில் இருந்த அத்தனை உயர் உத்தியோகத்தர்களும் ஆட்சேபித்து, குடியேற்ற நாட்டு மந்திரிக்கு மனுப்பத்திரம் அனுப்பிவைத்தனர். ஆயினும் இலங்கைத் தேசாதிபதி சேர். ஆதர்கோர்டன், பொன். அருணாசலத்தை வியந்து ''எங்கு திறன் உண்டோ அதற்கு மதிப்பு நல்குதல் அத்தியாவசியம்'' என்று விளக்கம் எழுதி லண்டன் மேல் அதிகாரபீடத்துக்கு அனுப்பினார். அந்த விளக்கம் மேல் அதிகாரிகளுக்குப் பூரண திருப்தியாக இருந்தது அவர்கள் அருணாசலத்தை அப் பதவியில் உறுதியாக இருக்கும்படி பணித்தனர்.

### பதிவுத்திணைக்கள மேலதிகாரி

1887ம் ஆண்டு தொடக்கத்தில் பதிவுத் திணைக்களமானது பல சீர்கேடுகள் முதலியன மல்கி இருந்தது. பொன். அருணாசலம் அவர்கள் முதலாவதாகப் பதிவு திணைக்களத்துடன் இணைந்திருந்த ஃபிஸ்கால்' பகுதியைப் இரண்டு வேறு பகுதிகளாக ஆக்கினார். அருணாசலம் அவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் இருந்த அரசாங்க எழுத்தாயர்களுடன் ஒருவராய் இருந்து அவர்கள் ஆற்றும் கருமங்களைச் செவ்வனே கற்றுக் கொண்டனர். அதன்பின், தாமே அந்த இரண்டு திணைக்களங்களில் செய்யவேண்டிய முக்கிய சீர்திருத்தங்களைச் செய்தனர். அத் திணைக்களத்துப் பணியாளர்களுக்கெனச் சகாய நிதி ஒன்று தொடங்கினார். அதனால் முன்பு அதிக வட்டிக்குப் பிறரிடம் பணம் வாங்கி அல்லல் உற்ற பணியாளர்களுக்கு அது வரப்பிரசாதமாக இருந்தது.

(வளரும்)

---

# என்று வரும் அப்பொங்கல்!

**வ. க. பரமநாதன்**

கல்விச் செல்வமதை கற்றறியும் முழுப்பேறு
இல்லை உமக்கென்று இடித்துரைத்துத் தடுக்கின்ற
பொல்லா வெறிகொண்ட கொலைஞர்கள் இங்கில்லை
எல்லாம் எமக்கேதான் என்றுகளி கொள்ளும்நாள்

●

பசிப்பினிக்குப் பலியாகி பரிதவிக்கும் பாவியர்கள்
வசிப்பிட மேதுமின்றி வகையற்று வாடித்தினம்
பசிக்குதம்மா பிச்சையென்றுபடையெடுத்து
அலையாது
வசிப்பதற்கு வாழ்விடங்கள் அமைகின்ற
அத்திருநாள்

●

சிறுமை அடைந்தோரைச்சீதனத்தால் கொல்லுகின்ற
நெறிகெட்ட அறிவுடையோர் நேர்மையுறக்
கண்திறந்து
சிறைகிடந்து சீரழிந்து மாய்கின்ற
பெண்குலத்தை
பறைசாற்றி அழைத்தவரின் பட்டதுயர்
மாய்க்கும்நாள்

●

வள்ளிக் கிழங்குடனே வற்றாலைக் கிழங்குராசு
வள்ளிக் கிழங்கதையும் மற்றுமுயர் பொருளனைத்தும்
அள்ளிச் செல்லவரும் அயல்நாட்டுச் செல்வத்தால்
துள்ளிக் குதித்துநாம் துயர்மறந்து
பொங்கும் நாள்

●

பெற்றநம் நாட்டுப் பெருமையினை சேர்க்கின்ற
நெற்காட்டு மத்தியிலே நின்றாடும் நெற்கதிர்கள்
முற்றியவை மணியாக முழுமணியும்
கொணர்ந்திங்கு
குற்றி நாம் பொங்கலிட்டுக் கொண்டாடும்
அத்திருநாள்

●

வற்றாத நிலாவரைநீர் வாய்க்காலில் பலவிடங்கள்
சுற்றிவர செய்துஉயர்ந் தோங்கிட வேளாண்மை
பற்பல செய்தேதமிழ் பாங்குடனே வாழும்நாள்
வெற்றியோடு வைக்கபொங்கல்
என்றுவரும் அப்பொங்கல்.

---

# 'நான் சொல்வது சரிதானே'

**இரா. உதயகுமார்**

நான் என்ற அகங்காரத்தில் இருந்து மனிதன் விடுதலை பெற்றால் தவிர உருப்படமுடியாதென வேதங்கள் கூறுகின்றன.

'நான்' என்னும் ஒரு திரை ஆண்டவனை மறைத்துவிடுகின்றது. இந்த திரையை நாம் பிடித்துக்கொண்டிருக்கும் வரையில் கடவுளைக்காண முடியாது. 'நான்' என்னும் அகங்காரம் ஒழிந்தால்தான் பளிச்சென்று இறைவன் தோன்றுவான் என ஞானிகள் புகல்கின்றார்கள்.

பக்தனுடைய 'நான்' தன்மையில் குற்றமில்லை, குழந்தையுடைய 'நான்' என பக்த சிரோன்மணிகள்வாதாடுகிறார்கள்.

ஆனால் மனிதர்களில் நூற்றுக்குத் தொன்னூற்றியொன்பது வீதத்தினருக்கு 'நான்' இல்லையேல் உயிரே போய்விடும். அவர்களுக்கு உயிர் அளிப்பது 'நான்'தான்,

'நான்' கூட அப்படித்தான் நினைத்தேன் என ஓயாமல் சொல்லுபவர்களை நம்முடைய வாழ்நாளில் 'நான்' பல முறை கண்டுள்ளேன். குழந்தைகள் முதல் பெரியோர்வரை பேசும் போது அவர்களை அறியாமல் இந்த 'நான்' எப்படியோ புகுந்து விளையாடுகின்றது.

குழந்தை ஒன்று குறும்புத்தனம் செய்துகொண்டே இருக்கின்றது. தாய் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. தாய் வேலையில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் போது குழந்தை அருகில் இருந்த மிளகாயை எடுத்து அறியாமல் கடித்துவிடுகின்றது. இதனால் குழந்தை வீறிட்டு அழத்தொடங்குகிறது. குழந்தைக்கு இனிப்பு, ஆறுதல் கொடுப்பதைப் பற்றி சிந்திக்காமல் 'மிளகாயைத் தொடாதே' என 'நான்' பலதடவை சொன்னேன். கேட்டாயா என அதட்டிய பின்புதான் இனிப்பு கொடுத்துத் தாலாட்டி குழந்தையின் அழுகையை நிறுத்துகின்றாள் தாய்!

பெரியோர்களே 'நான்' என்ற பதப்பிரயோகத்தில் இருந்து தப்பமுடியவில்லை. இந்நிலையில் குழந்தைகள் எப்படித் தப்பமுடியும்?

'நான்' சொல்கின்றபடி கேட்டால்தாண்டா உன்னை விளையாடச் சேர்ப்பேன் இல்லையேல் 'நான்' சேர்க்கமாட்டேன்' என குழந்தைகளிடம் அடிக்கடி இப்பேச்சு அடிபடுவதை நம் காதுகளில் கேட்டிருக்கின்றோம்.

'நான்' சொல்லுவதெல்லாம் நீங்க இந்தக் காதிலே வாங்கி அந்தக்காதாலே விட்டுடுங்க என 'நானில்' அழுத்தம் கொடுத்து கணவனிடம் சண்டையிடும் மனைவிகளும் இருக்கின்றார்கள்.

காதலர்களின் பேச்சுகளிலும், மடல்களிலும் 'நான்' இன்றி நீயில்லை. நீ இன்றி 'நான்' இல்லை என்ற சொற்கள் கீறல் விழுந்த இசைத்தட்டில் திரும்பத் திரும்ப ஒலிப்பது போல் ஒலிக்கும்.

கடைக்குப் பொருட்களை வாங்கச் சென்றால் வியாபாரியுடன் உரையாடும்போது 'அம்மா சும்மா கேளுங்கள் எல்லாம் உங்கட்குத் தெரியாதுங்க 'நான்' சொல்லுகின்ற விலையைச் சொல்லிவிட்டேன் நீங்கள் கேட்கின்ற விலையைக் கேளுங்கள். இஷ்டமாயின் 'நான்' தருவேன் இல்லையேல் கட்டாது' என சொல்லிவிடுகின்றான். இவ்வாறு அவனின் பேச்சு அமைகின்றது.

கடன் வாங்கியவரும் கடன் கொடுத்தவரும் சந்திக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கும் அவையும்

## கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

### மறைந்து நிற்பவன் நாடகாசிரியன்

''நாடக உலகில் ஆசிரியன் கடவுள் போல விளங்குகிறான். மனித தத்துவம் என்ற மண்ணிலிருந்து வெவ்வேறு வடிவத்தோடு, ஒன்றைப்போல் மற்றொன்று இராமல், பாத்திரங்களை வனைபவன் அவன். பிறகு தான் படைத்த சூழ் நிலையிலே பாத்திரங்களை மோதவிட்டோ, குலாவவிட்டோ, விளையாடுகிறவன் அவன். இதனால் விளைகிற நாடகக் கதையின் போக்கைப் பாத்திரங்களின் இயல்பினால் வரையறுத்து, முடிவை நோக்கிக் காரண காரியத் தொடராய் செலுத்துகிறவனும் அவன். நாடக உலகின் ஆதிமுதற் காரணன் அவனே. என்றாலும் உலகின் காரணனான இறைவனைப் போலவே நாடகாசிரியனும் மறைந்தே நிற்கிறான்'' என்கிறார் பேராசிரியர் அ. சீனிவாசகராகவன். உரையாடல் உள்ளத்தின் குரலாய் அமைய வேண்டும். பலபல உள்ளங்களின் குரலாய் அமைய வேண்டும் பல பல உள்ளங்களின் குரலாய் மாறி மாறி உரையாடல் நிகழ்கிறபோது, அங்கே பல பல உணர்ச்சிகளும் தன்மைகளும் நிலைகளும் மேன்மைகளும் அவலங்களும், சுருங்கக் கூறின், வாழ்வின் உட்பொருளில் ஒரு பகுதி கடல் போல அலைமோதும். அப்போது உண்மை நாடகம் பிறக்கும் எனவும் குறிப்பிடுகிறார் பேராசிரியர்.

### எழுத்துப் பிரதிதான் நாடகமல்ல

''பழைய காலங்களிலே நாடகமேடைப் பாடல்கள் 'தலைகரணமாக' வாய்ப்பாடமாய் இருந்த அதே வேளை, திட்டவட்டமாக ஏட்டுப் பிரதியைக் கையுடன் வைத்திருந்தனர். இடைக்காலத்திலே மேடை நாடங்கள், சிறப்பாக சமூக நாடகங்களின் மேடையேற்றம் பரவலான காலத்தில், கட்டுப்பாடான பிடிமானமுள்ள நாடக எழுத்துப் பிரதியைத் திட்டவட்டமாகப் பின்பற்றும் நிலை இருக்கவில்லை. விரும்பத்தகாத இந்த விபரீதப் போக்கினால் தான் 'கோமாளி' நாடகங்கள் தோன்ற வழிதிறந்தது. நல்ல நாடகத்தைச் சரியான முறையில் மேடையேற்ற வேண்டுமானால் தயாரிப்பாளர் பிரதி, தனித்தனி நடிகர்களுக்கான பிரதி, பாத்திரங்களின் இயக்கம் பற்றிய பிரதி, விவரிக்கும்பிரதி, ஒளிப்பிரதி, அரங்கப்பிரதி, இசையாளர் பிரதி எனப் பல்வகைப் பிரதிகளையும் பயன்படுத்தும் நெறிமுறைகள் அவசியம். நாடக எழுத்துப் பிரதிதான் நாடகமல்ல. மேடையில் இறுதியில் காண்பதே நாடகம்'' என்கிறார் நாடகக்கலைஞர் -இ. சிவானந்தன்.

### ஐயாயிரம் ரூபாய் நகைகளுடன் நடிகை

''நான் பார்த்த ஒரு நாடகத்தில் பொன்னும் வைரமுமாய் இருந்த ஒரு நடிகையைப் பார்த்தேன். எவ்வளவோ கூறியும் போலி நகைகள் மேடைக்கு எடுப்பாய் இருக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. பண வசதி இருந்தது. நாடகத்துக்கெனவே ஐயாயிரம் ரூபாய்க்குமேல் நகைக்ள் வாங்கினார்கள். நகைக்கடையொன்றில் நகைகளை இரவலெடுத்து, தயாரிப்பாளனைவிட, கூடிய முக்கியத்துவத்தை நகைக்கடைக்காரனுக்கு கொடுத்த நிறுவனத்தையும் நானறிவேன். ஒப்பனை விஷயத்தில் என் நடிகருக்குச் சுதந்திரம் அளிப்பது விரும்பத்தக்கதல்ல. இதே வேளை, ஏதாவது பூச்சைப் பூசிவிட்டாற் தும் என்று நினைக்கிற தயாரிப்பாளரும் உளர். நாடகம் மேம்பட ஒரு உடை ஆலோசகர் அவசியம். காலம், பாத்திரத்தன்மை ஆகியவற்றுடன் ஒன்றிநிற்கும் உடைத்தேர்வு தயாரிப்பாளரின் முழுப்பொறுப்பாகும். உடைகள் ஒரே லயத்தையுடையனவாயும், முழுமைக்குமிடையே ஒரு ஐக்கியத்தை உண்டுபண்ணுவனவாயும் அமையவேண்டும்'' எனக் குரல் கொடுக்கிறார் தேவன் - யாழ்ப்பாணம்.

### பொதுமக்கள் அரங்கு யாழ். நகரமண்டபம்

அண்டாண்டாய் எத்தனையோ சொற் பெருக்குகள், இசை நடனங்கள், நாடகங்கள், இலக்கிய விழாக்களைக் கண்ட யாழ் - நகரமண்டபம் கடந்த ஆறு ஆண்டுகளாய் சினிமாத்தியேட்டராய் அமைந்தது ஒரு துர்ப்பாக்கிய நிலையே, இன்றைய மாநகர உறுப்பினர்களும் மேயரும் இதனைப் பொதுமக்கள் அரங்காக மாற்றிய மகத்தான சாதனையைக் கலையுலகம் பெரிதும் வரவேற்கிறது. திரை, ஒளி வசதிகளை நவீன முறைகளிற் அமைத்து, ஆசன வசதிகளையும் செப்பனிட்டு கலை வளர்க்கும் நல் நோக்கில் வாடகையை குறைத்து, கலைமன்றங்களை, கலைஞர்களை ஊக்க மாநகரசபை முன்வரும் என்ற உணர்வோட்டம் கலைத்தாகமுள்ளோர்க்கு உண்டு. நல்ல முறையில் அமைந்த மண்டபம் இது; அளவான மண்டபமும் கூட. மேடை வசதிகளைச் சிறப்புற அமைக்க நாடக நெறியாள்கை வல்லுநரின் ஆலோசனையையும் செவிமடுத்தல் கூடிய நன்மையைத் தரலாம்.

# விமர்சனம்: 'சேதுபந்தனம்'

சிறந்த சிங்களச் சிறுகதை ஆசிரியர்களின் 12 சிறுகதைகள்'

மொழிபெயர்ப்பு- மயிலங்கூடலூர் த. கனகரத்தினம் பி. ஏ. (இலண்டன்).

சிங்களமொழியின் புதுமை இலக்கியத்துறைக்கு வளஞ் சேர்த்த மூத்த எழுத்தாளர் மாட்டின் விக்கிரமசிங்ஹா தொடக்கம் சிங்கள, தமிழ் இலக்கிய கலாசாரப் பாலமாக விளங்கும் டி. டி. நாணயக்கார வரையுள்ள பன்னிருவரின் பன்னிரு சிறுகதைகளின் தொகுதி 'சேதுபந்தனம்' என்ற தலையங்கத்தில் வெளியாகியுள்ளது. அந்நாளிலே தமிழகத்துக்கும் இலங்கைக்கும் சேது அணையினைக்கட்டி இணைப்பை உண்டாக்கிய இராமனைப்போலத் தமிழுக்கும் சிங்களத்திற்கும் இலக்கிய இணைப்பினை இம்மொழிபெயர்ப்புக் கதைகளால் தாம் ஏற்படுத்துவதை உளங்கொண்டு அதற்குப் பொருத்தமாகச் 'சேதுபந்தனம்,' என்ற பெயரை இத்தொகுதிக்கு வழங்கியிருக்கிறார் மொழிபெயர்ப்பாசிரியர். அது பொருத்தமானதே. சிங்கள எழுத்தாளரின் சிறுகதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தது போலவே தமிழ் எழுத்தாளரின் சிறுகதைகளைச் சிங்களத்திற்குத் தமது மொழிபெயர்ப்பு மூலம் அறிமுகம் செய்துள்ள இவரை நாம் பாராட்டியேயாகவேண்டும். இத்தகையஅறிமுகங்கள் வாயிலாக இலங்கையின் இரு பேரினங்களுக்கிடையேயுள்ள இடைவெளியினைக் குறைத்துச் சுமுகமான உறவினை ஏற்படுத்துவதுசாத்தியமாகலாம். எனவே மயிலங்கூடலூர் த. கனகரத்தினம்அவர்கள். தமது இலக்கியப் பணியினூடாக ஒரு தேசியப்' பணியையே ஆற்றியிருக்கிறார் என்று தயங்காது கூறலாம்.

'சேதுபந்தனம்' தொகுதியிலே 1951 ஆம் ஆண்டு தொடக்கம் 1979-ம் ஆண்டு வரை வெளியாகியுள்ள சிங்கள சிறுகதைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு சிறுகதைகள் வெளியாகியுள்ளன. இவற்றிலே பதினொரு சிறுகதைகளே மொழிபெயர்ப்புக்கள், இறுதியில் அமைந்த 'ஏன் முதலாளி' என்பது டி, டி. நாணயக்கார தமிழிலேயே எழுதி 1972-ல் 'ஈழநாடு' வார இதழில் வெளியிட்ட சிறுகதை.

மாட்டின் விக்கிரமசிங்ஹாவின் 'கமருலையின் மகன்' சிங்களக் கிராமப்புறத்தின் மண்வாசனையை அழகாகச் சித்திரிக்கின்றது. கதாசிரியருக்கு அவரின் ஊரினனான அந்தோ அண்ணன் 'கமருள' என்னும் பெயருடைய ஒருவன் ஒரேயொருஊரில் இருந்தான்' என்று உபகதை போலச் சொல்வதாக இக்கதையினை ஆசிரியர் எழுதியிருக்கிறார். எனினும் அன்றும் இன்றும் நாளையும் சிங்களக் கிராமங்களிலே நடந்த நடக்கின்ற நடக்கப்போகின்ற சம்பவங்கள்தாம் இக்கதையிலே திறமையாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. எவ்வித சிரமமுமில்லாமல் லாவகமாகக் கதை சொல்வதிலே மாட்டின் விக்கிரமசிங்ஹ திறமை படைத்தவர் என்பதற்கு 'கமருலையின் மகன். நல்ல உதாரணம்.

குணதாச அமரசேகரவின் 'அபூர்வசம்பவம்' என்ற சிறுகதை காலி பஸ்தரிப்பு நிலையத்தில் உள்ள இளைப்பாறு மண்டபத்திலே இரவில் படுத்தெழும்பும் பிச்சைக்காரனுக்கும் அவனதுநாய்க்குமிடையே ஏற்பட்ட அந்நியோன்ய அன்புறவினை உருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது: என்றாலும் 'இளம்பாளையின் கள்' என்ற ஒஸ்வின் த. அல்விஸ் இன் சிறுகதை. சொல்லும் பாணியிலும் உள்ளத்தைத் தொடும் வகையிலும் தலைசிறந்து விளங்குகின்றது- பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரான சைமன் விஜயவீரா தமது பள்ளி மாணவனை தந்திரிசைக்கொண்டு கித்துள்கள் எடுப்பித்துக் குடித்து வருகிறார். அப்பாவியான தந்திரிசுக்குப் பெரியவரின் குடிப்போக்கும் சரியானதாகவே படுகிறது, 'பெரியவர்கள் செய்வது எல்லாம் சரியானதே' என்ற மனப்பான்மை கொண்ட அவனது பிற்கால வாழ்க்கை குடிக்கே பலியாகி அவன் தன் மனைவியை அடித்துக்கொன்று விஜயவீராவைக் கொல்ல முயன்று மரணதண்டனை பெறுவதோடு முடிவதை மிகமிக உருக்கமாகவும் எதார்த்தமாகவும், உளவியற் போக்கமைய ஆசிரியர் சித்திரித்துள்ளார். மறைமுகமாக ஆசிரியர் சமுகத்தின் பொறுப்பை அதற்கு நினைவூட்டி அதன் பிழைவழிகளைச் சாடுவதாகவும் இச்சிறுகதை அமைவதால் இதற்கு நல்லதொரு தார்மீகப் பின்னணியும்இயல்பாகவே அமைந்துவிட்டது.

ஏ. வி. சுரவீரவின் 'எங்களுக்கும் ஒருநாள் பொழுது விடியாதா?', ஜயலத்மனோரத்னவின் 'கல்', லக்ஷ்மி போம்புவலவின் 'பூக்காரி', லீல் குணசேகராவின் 'மறு பிறப்பு' ஆகிய நான்கு கதைகளும் ஏழைகள் - அநாதைகள்- தொழிலாளிகள் ஆகிய சமூக அடித்தள மக்களின் வாழ்க்கையை எதார்த்தபூர்வமாகச் சித்தரிப்பதில் வெற்றியடைந்துள்ளன. எழுத்தாளரின் நுட்பமான நோக்கையும் சமூக அனுதாபஉணர்வையும் இவை திறம்படச்சித்திரிக்கின்றன. டி. டி. நாணயக்காராவின் 'ஏன் 'முதலாளி' சுயநலமும் அகங்காரமும் பணத்திமிரும் கொண்ட ஒருவன் பஸ்சிலே லஞ்சம்கொடுத்து வசதியான இடம்பிடித்து தனது ஆசனத்திலே எவரையும் அமரவிடாது அதிகாரம்பண்ணியதால் அடைந்த அவலத்தையும் அவமானத்தையும் அங்கதச்சுவைபடச் சித்திரிக்கின்றது. குணசேனவிதானவின் துயர ஏணிகள் வழக்கமான காதல் விடயத்திற்கு மகத்துவம் அளித்துள்ள சாதாரண சிறுகதை எதிரிவீர - சரத்சந்திரவின் 'காலங் கடந்தபிறகு' பாலியல், உளவியல், பல்கலைக்கழக வாழ்வனுபவங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து நகைச்சுவையும் அமையும்வண்ணம் எழுதப்பட்ட நல்ல சிறுகதை. மடவல எஸ். ரத்னயக்கவின் சந்தவதி' கே. ஜயத்திலக்காவின் 'தண்டனை' என்ற இரு கதைகளும் சொல்லும் பாணியிலே சிறந்து விளங்கினாலும் காத்திரமான கதைக்

(9ம் பக்கம் பார்க்க)

## வரப்பெற்றோம் 'தேன்கூடு'

'நெல்லை நடேஸ்' அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'தேன்கூடு' (சிறு சஞ்சிகை) வழமையாக சிறுசஞ்சிகையாசிரியர்கள் பிரகடனப்படுத்தும், 'துணிவாக முகம் கொடுக்க' விழையும் நம்பிக்கைத் தொனியுடனான அறிமுகத்துடன் தோற்றம் பெற்றுள்ளது. 28 பக்கங்களைக் கொண்ட இச்சஞ்சிகை வர்க்க ரீதியான கலைக் கண்ணோட்டத்துடனான அணுகு முறையினை இலட்சியமாக ஏற்றுள்ளது.

இவ்விதழில் காணும் ஒரு மாபுதினம் 'வாகை' என்ற கலை, இலக்கிய, விமர்சன இதழ் விரைவில் வெளிவருகிறது என்ற விளம்பரமாகும். தென்னிந்திய சஞ்சிகைகளுக்கெதிராகவே போராடி விற்டனையாகவேண்டிய 'தேன்கூடு' தனது உதரத்தில் பிறிதொரு குழந்தையையும் சுமந்து வந்திருப்பது ஆச்சரியமாயள்ளது.

'தேன் கூடு' கலையாதிருக்கவும் வாசகர்களாகிய தேனீக்கள் அதனைமொண்டு சுவைக்கத்தக்க 'பாணியை' நிறைவுடன் வழங்கவேண்டும் என்பதுமே எமது வாழ்த்து.

க. நா.

## நான்சொல்வது...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கடன் கொடுத்தவர் கோபத்துடன் 'நான்' சொன்னால் சொன்னவன் தவணையில் தருவேன் என நூறு ரூபாய் வாங்கி பத்து மாதமாகிவிட்டது. 'நான்' நம்பித்தந்தேன். ஆனால் இப்படிபடி ஏமாற்றலாமா? எனக் கேட்கிறார். ஆனால் வாங்கியவர் என்ன சொல்கின்றார் தெரியுமா?

'நான்' என்ன செய்ய என் பாடு எதிர்பாராமல் இந்நிலைக்கு வந்துவிட்டது என்றாலும் 'நான்' எப்படியும் வார மாத சம்பளத்தில் தருவேன் என்கின்றார்.

சோர்வாய்ப்பட்ட குழந்தையைக் கண்ணீருடன் டாக்டரிடம் தாய் கொண்டுசெல்கின்றார். ஆனால் அவர் என்ன சொல்கின்றார். கவலைப்படாதே 'நான்' குழந்தையை எப்படியும் காப்பாற்றித் தருவேன்.

பிச்சைக்காரன் பிச்சை கேட்கும் போது ஐயா 'நான்' சாப்பிட்டுப் பல நாட்கள் என பிச்சை கேட்கின்றான். ஆனால் பிச்சை இடுகின்றவனே 'நான்' தினமும் தந்தால் நடுவீதியில்தான் 'நான்' நிற்கவேண்டும் என்கிறார்.

அரசியல் வாதிகளிடமும் அரசியல் மேடைகளில் 'நான்' என்ற சொல் பல உருவங்களில் தோற்றமளிக்கின்றது.

'நான்' சவால்விடுகின்றேன்.

'நான்! மக்களுக்காக என்னை தியாகம்பண்ணத்தயார்.

'நான்' பதவியை தூசாக மதிப்பவன்.

'நான்' தலைவர் வழி நடப்பவன் என்றெல்லாம் கூறுவார்கள்.

'இவ்வாறு 'நான்' என்ற சிறிய சொல் பல திருவிளையாடல்களைப் புரிகின்றது. 'நான்' என்ற சொல் இல்லாத வாழ்நாள் எது?

ஆண்டவனின் திருவிளையாடல்களை எண்ணித் தெளியலாம் ஆனால் இந்த 'நான்' செய்யும் திருவிளையாடல்களை எப்படி எண்ணித்தெளிவது?

(நான் சொல்வது சரிதானே?)

## காலம் வரவேண்டும்

பொய்யும் புரட்டும் புன்மையும் நீங்கி
புத்தொளி தான் பெற்று
மெய்வழி ஓங்கித் தர்மம் நிலைத்து
நல்லவர் வாழ் வுயர்ந்து
மெய்யவர் கொட்டம் அடங்கி அழிந்து
அன்பு நெறி ஓங்கி
வையகம் எங்கும் நீதி நிலைக்கும்
காலம் வரவேண்டும்.

-த. நாகேஸ்வரன்
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல் வைத்தியம்

பல்வைத்திய கலாநிதி பா. சோ. பாரதி

## (2)

**பல்** வைத்தியத்தில் முக்கியம் பெற்றதும், பொது மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியதுமானவை.

1. பற்சூத்தை, (Caries)
2. பல் சூழிழைய நோய், Periodontal disease.
3. ஒழுங்கீனமான பல் வரிசையை ஒழுங்குபடுத்துதல், (அதாவது அழகு படுத்துதல்) - Orthodontics.
4. செயற்கைப் பல் கட்டுதல் (Artificial dentures)

ஆகும். இவற்றை விரிவாக ஆராயுமுன்பு பற்களைப்பற்றியும் அவற்றின் அமைப்புப் பற்றியும் அவை முளைக்கும் காலம் பற்றியும் சிறிது விளக்குவோம்.

### பற்கள்

குழந்தை பிறந்து ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பின் முதன்முதலாகக் கீழ் அலகில் பல் முளைக்கின்றது. மழலை பேசும் குழவியின்புன்சிரிப்பைக் காண ஆவலுடன் எதிர்பார்த்திருந்த பெற்றோர் பல் முளைத்தவுடன் அந்நாளைக் கொண்டாடுகின்றார்களே! ஏன்? முகத்திற்கு அழகு செய்வது பற்களே! அப்பற்கள் முளைத்ததும் தாய் மகிழ்கிறாள். அதற்காகத் தமிழ் மக்கள் பல்லுக் கொழுக்கட்டை அவித்துக் கொண்டாடுவதைக் காண்கிறோம். ஒருவரின் முகத்திற்கு வசீகரத்தைக் கொடுப்பதுடன் அவர் அடையும் மகிழ்ச்சியைச் சிரிப்பின்மூலம் வெளிக்காட்டவும், அவரின் வளர்ச்சிக்கு முக்கியமாக வேண்டப்படும் உணவுகளைக் கடித்தும், கிழித்தும் அரைத்தும் உண்பதற்கு உதவியாகவும் இருப்பவை பற்களே. மேலும், தெளிவாக எழுத்துக்களை உச்சரித்துப் பேசுவதற்கு உதவியாக இருக்கின்றன. இதனாலன்றோ பல்போனால் சொல் போச்சு என்று எமதுமூத்தோர் சொல்லிச் சென்றனர்,

### பாற் பற்கள் அல்லது நிலையில்பற்கள்

ஒருவருக்குக் குழந்தைப் பருவத்திலே முதல் தோன்றும் பற்கள் பாற்பற்கள் என்று சொல்லப்படும். அநேகமாகக் குழந்தை பிறந்து 6-8 மாதங்களில் கீழ் அலகில் முதலாவது வெட்டும் பற்கள்(Central-Incisors) முளைக்கத் தொடங்கும். இதையடுத்து மேல் அலகில் வெட்டும் பற்கள் மூளைக் கத் தொடங்கும்.

| பாற்பற்கள் இனம் | முளைக்கும் காலம் |
|---|---|
| மையவாய் வெட்டும் பற்கள் | 6-8 மாதங்கள் |
| பக்கத்து வெட்டும்பற்கள் | 8-9மாதங்கள் |
| வேட்டைப் பற்கள் | 16-18 மாதங்கள் |
| கடைவாய்ப் பற்கள் முதலாவது | 12-14 மாதங்கள் |
| கடைவாய்ப் பற்கள் இரண்டாவது | 24-30மாதங்கள் |

மேற்கூறியபடி குழந்தைக்கு இரண்டரை வயதிற்குள் எல்லாப் பாற்பற்களும் முளைத்து விடுகின்றன. மேல் அலகில் 10 பற்களும் கீழ் அலகில் 10 பற்களுமாக 20 பாற்பற்கள் முளைத்துவிடுகின்றன.

### பாற்பற்கள் முளைக்கும் காலத்தில்வேறுபாடுகள்

எல்லோருக்கும் பற்கள் முளைக்கும் காலம் ஒரேமாதிரி இருப்பதில்லை. அநேகமான குழந்தைகளுக்கு மேற்கூறிய அட்டவணையின்படி பற்கள் முளைப்பதைக் காணலாம். ஆனால் சிலருக்கு முந்தியோர் அன்றிப் பிந்தியோர் தோன்றக் கூடும். குழந்தை உட்கொள்ளும் உணவு, அவர்களின் வளர்ச்சி, பழக்கங்கள், முரசின் தடிப்பம், சந்ததி இயல்புகள் இப்படிப் பலகாரணங்களாலே பற்கள் முளைக்குங் காலத்தில் மாற்றம் ஏற்படலாம். ஆகவே பாற்பற்களைப் பொறுத்த மட்டில் பெற்றோர்கள் கவலைப்படத் தேவையில்லை. எத்தனையோ தாய்மார் என் வைத்தியசாலையில் வந்து "எனது பிள்ளைக்கு ஒரு வருடம் முடியப்போகின்றதே! இன்னமும் ஒரு பல்லாவது முளைக்கவில்லையே என்று கவலைப்படுவது உண்டு. சிலர் தாங்களாகவே ஏதாவது கைமருந்து செய்துபார்த்துப் பின்னர் வைத்திய உதவியை நாடுவர், இது மிகவும் தவறானதொன்று எதற்கும் வைத்திய ஆலோசனை பெறுவதே சாலச் சிறந்தது."

### நிலையான பற்கள்

முதலாவது நிலைப்பல்லான முதலாவது கடைவாய்ப்பல் கீழ் அலகில் 6-7 வயதில் முளைக்கின்றது! இந்தக் காலத்தில் குழந்தைக்கு எல்லாப் பாற்பற்களும் முளைத்திருக்கும். இதையடுத்து வெட்டும் பற்களும் வேட்டைப் பற்களும், முன்கடைவாய்ப் பற்களும், கடைவாய்ப்பற்களும் முளைக்கும். அனேகமாக பதின்மூன்று வயதிற்குள் மேல் அலகில் பதினன்கு நிலையான பற்களும் முளைத்துவிடுகின்றன. நிலையான பற்கள் முளைக்க ஆரம்பிக்கப் பாற்பற்கள் வேர்கள் கரைவுற்று ஒவ்வொன்ருக விழுந்துவிடுவதைக் காணலாம். ஆனால் வேறு சில காரணங்களால் பாற்பற்கள் நேரகாலத்திற்கு விழுவதில்லை. இதனால் நிலையான பற்கள் இடம்விலகி முளைத்துவிடுகின்றன. இந்த நிலையைக் கவனியாது விடுவதால் இவர்கள் பல் ஒழுங்கில் மாற்றம் ஏற்படுவதுடன் வேறு பிரச்சனைகளையும் தோற்றுவிக்கிறது. (இதுபற்றி பின்பு விரிவாக ஆராய்வாம்.)

| நிலையான பற்கள் | முளைக்கும் காலம் |
|---|---|
| மையவாய் வெட்டும் பற்கள் | 6-8 வயதில் |
| பக்கத்து வெட்டுப் பற்கள் | 7-9 வயதில் |
| வேட்டைப் பற்கள் | 9-13 வயதில் |
| முதலாவது முன் கடைவாய்ப் பற்கள் | 9-12 வயதில் |
| இரண்டாவது முன் கடைவாய்ப் பற்கள் | 11-13 வயதில் |
| மூன்றுவது கடைவாய் பற்கள் | 17-21வயதில் |

மூன்றுவது கடைவாய்ப் பற்கள் சிலருக்கு இந்தவயதெல்லைக்குள் (Wisdom teeth)முளைப்பதில்லை. அடிக்கடி வேதனை கொடுத்த வண்ணம் இருந்து படிப்படியாக முளைக்கும். சிலருக்கு முளைக்காது. எலும்புக்குள் தங்கிவிடவும் கூடும். (Unerupted wisdom tooth)சிலருக்கு பிழையான திசையில் முளைத்து, அல்லது முளைக்காத நிலையிலிருந்து இன்னலைக் கொடுக்கும் (Impacted-tooth).

### பற்களின் அமைப்பு

பாற்பற்களும்நிலையான பற்களும் அமைப்பில் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. எந்த ஒரு பல்லிலும் மூன்று பிரிவைக் காணலாம், முரசுக்கு வெளியே தெரியும் பகுதியைப் பற்சிகரம் என்றும் (Crown) முரசுக்குக் கீழே என்புக்குள் இருக்கும் பகுதியை பல்வேர் (Root) என்றும் இரண்டிற்கும் நடுவேயுள்ள பகுதியை பற்கழுத்து (Neck) என்றும் பிரித்துக் கூறலாம். வெளி அமைப்பைப்போன்று பாற்பற்களும் நிலையான பற்களும் உள் அமைப்பிலும் ஒரே மாதிரியாக உள்ளன.

பல்லின் நடுவேயிருக்கும் பற்குழியைச் (Pulp Cavity) சூழ்ந்திருப்பது பன்முதல் (Dentine) ஆகும். இதுவே பல்லின் பெரும் பகுதியாக அமைகிறது. பற்சிகரப்பகுதியில் பன்முதலைச் சுற்றி மிளிரி (Enamel) உள்ளது. மிளிரியே மனிதனின் உடம்பிலுள்ள மிகவும் கடினமான பகுதியாகும். பற்களுக்குப் பாதுகாப்பையும், வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பது மிளிரியே. பல்லின் வேர்ப் பகுதியிலே பன்முதலைச்சூழ்ந்திருப்பது பற்காரையென்பது (Cementum). இது பற்களை, பல்குழியைத்தொடு சேர்ந்து எலும்புடன் இணைத்து வைத்திருப்பது. பற்குழிக்குள் பற்கூழ் (Pulp) நிரம்பியிருக்கும். பற்களுக்கு வேண்டப்படும் சத்துக்களைக் கொண்டு செல்லும் குருதிக் கலன்களும், உணர்ச்சி நரம்புகளும் வேர் நுனியிலிருக்கும் சிறு துவாரத் [illegible] அமைந்து [illegible]ருக்கும். (தொடரும்)

# யாழ்ப்பாண மன்னர்களும் போர்த்துக்கேயரும்

அ. சோமேசசுந்தரி

(உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

**யா**ழ்ப்பாண இராச்சியத்தின் பிற்பட்ட கால வரலாறு இதுவரையில் செம்மையான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இக்காலப் பகுதி பற்றிய தெளிவான மூலாதாரங்கள் சுதேசப் பிரதேசங்களில் கிடைக்காமையும், அவை பேணப்படாமையும் இதற்கான காரணங்களாகும். எனினும் அதிர்ஷ்டவசமாகப் பெருமளவு போர்த்துக்கேய ஆதாரங்கள் டதினறும் பதினேழாம் நூற்றுண்டு வரலாற்றுக்குக் கிடைத்திருப்பது மிகவும் முக்கியமான விடயமெனலாம். அவற்றில் கிடைக்கும் ஆதாரங்களையும், சுதேச ஆதாரங்களில் கிடைக்கும் குறிப்புக்களையும் வைத்துக் கொண்டு மேற்குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய வரலாற்றை ஓரளவுக்காவது எடுத்துக் கூறமுடியும். மேலதிக ஆதாரங்களும், ஆவணங்களும் பெறப்பட்டு நுணுகி ஆராயப்படுமிடத்து. இக் கட்டுரையின் அடிப்படையான கருத்துகளிலும் மாற்றம் ஏற்படலாம்.

யாழ்ப்பாண இராச்சியத்துடன் போத்துக்கேயர் கொண்ட தொடர்புகளும், அவற்றிற்கு யாழ்ப்பாண மன்னர்கள் முகங்கொடுத்த விதங்களும், ஈற்றில் போர்த்துக்கேயரே யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆதிக்கம் பெற்றமையும் இக்குறுகிய காலப் பகுதிக்குரிய முக்கிய அம்சங்கள் எனலாம். ஆதலால் யாழ்ப்பாண மன்னர்களும் போத்துக்கேயரும் என்ற தலைப்பில், யாழ்ப்பாண இராச்சியத்தின் பிற்பட்ட கால வரலாற்றினை உள்ளடக்க முடியும்.

### முதலாவது சங்கிலி மன்னன்

யாழ்ப்பாண மன்னர்களில் போர்த்துக்கேயர் தொடர்பு கொள்ளும் முதல் மன்னனாக விளங்குபவன் முதலாவது சங்கிலி செகராசசேகரன் எனப்படும் மன்னனாவான். அவன், அவ்வேளையில் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் கத்தோலிக்க மதத்திற்கு எதிராகவும் தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டான் என்றே அறிய முடிகிறது. இம்மன்னன் கத்தோலிக்க மதத்துக்கு மாறிய பெருமளவு மக்களை மன்னாரில் கொலைசெய்வித்தான் என்பது போர்த்துக்கேய ஆதாரங்களாலும்,சுதேச ஆதாரங்களாலும் அறியவரும் விடயமாகும். இவனது காலத்தில், போர்த்துக்கேயர் தொடர்ச்சியாகச் சில படையெடுப்புக்களை மேற்கொண்டு பயமுறுத்தினர். ஆயினும் மன்னாரைக் கைப்பற்றுவதுடன் மட்டும் அவர்களது ஆதிக்கம் தடைப்பட்டது.

ஆனால் சங்கிலி மன்னனின் பின்வந்த மன்னர்கள் போர்த்துக்கேயரின் மன்னார் வழியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். சிறப்பாக 1561-ம் ஆண்டளவில் சங்கிலி மன்னன் இறந்ததிலிருந்து 1570-ம் ஆண்டளவில் பெரிய பிள்ளை செகராசசேகரன் என்பான் ஆட்சியைப் பெறும் வரையில் ஏற்பட்ட அரசியல் பிரச்னைகளின் போது, மன்னர்களை ஆட்சியில் அமர்த்துதலில் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயத் தளபதி கூடிய பங்கு வகித்தான்.

1570-ஆம் ஆண்டின் பின் ஆட்சிக்கு வந்த மன்னர்கள் தொடர்ந்து சில ஆண்டுகளுக்கு முதலாம் சங்கிலி மன்னன் போன்று போர்த்துக்கேயருக்கு எதிரானதும் கத்தோலிக்க மதத்திற்கு எதிரானதுமான கொள்கையைப் பின்பற்றினர். இவர்கள் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயரை அகற்றும்பொருட்டுப் பல படையெடுப்புகளை மேற்கொண்டனர். 1582-ஆம் ஆண்டில் பெரியபிள்ளை செகராசசேகரனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த புவிராஜ பண்டாரம் பரராஜசேகரன் என்பவன் தொடர்ச்சியாக மன்னார்மீது மேற்கொண்ட தாக்குதல்கள் போர்த்துக்கேயர் திட்டமிட்ட படையெடுப்பொன்றை யார்ழ், இராச்சியத்தின் மீது மேற்கொள்ளவைத்தது. 1591ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இப்படையெடுப்பின் விளைவாக, புவிராஜ பண்டாரம் கொலைசெய்யப்பட்டு, யாழ்ப்பாண இராச்சியம் வெற்றிகொள்ளப்பட்டது:

### போர்த்துக்கேயரை அங்கீகரித்து...

ஆயினும் நேரடி ஆட்சி மேற்கொள்ள விரும்பாத போர்த்துக்கேயர் மக்களை அழைத்துப் போர்த்துக்கேய மன்னனைத் தம் தலைவனாக ஏற்கும்படி கூறியதுடன் சுதேச அரசகுமாரனைப் போர்த்துக்கேய மன்னனின் பெயரால் ஆளும்படி செய்துவிட்டுச் சென்றனர். இம்மன்னனைத் தொடர்ந்து வரும் யாழ்ப்பாண மன்னர்கள் போர்த்துக்கேயரை அங்கீகரித்து அவர்கள் அனுசரணையின்கீழ் ஆட்சி செய்ததுடன் கத்தோலிக்க மதத்தைப் பரப்பவும் வழிவிட்டனர். எதிர்மன்னசிங்க குமாரன் ஆட்சியைத் தொடர்ந்து அவனது சிறிய குழந்தை அரச வாரிசாக முன்வைக்கப்பட்டது. எதிர்மன்னசிங்க குமாரன் அரசகேசரி என்னும் தனது சகோதரனை அரச பாதுகாவலனாக நியமித்த போதிலும், எழுச்சிபெற்று வந்த ஒரு அரசகுமாரனால் கொலைசெய்யப்பட்டான். அவனே சங்கிலி குமாரன் ஆவான். சங்கிலி குமாரன் தானே குழந்தை அரசனின் பாதுகாவலன் என்பதைநிலைநாட்டிக்கொண்டான், ஆயினும் மக்கள் மத்தியில் அவன் செல்வாக்குப்பெறவில்லை. அவனும் போர்த்துக்கேயர் தயவிலேயே தங்கி இருக்கவேண்டியதாயிற்று.

அவனது நிலையில் இராச்சியத்தில் ஏற்பட்ட பிரச்னைகளும், போர்த்துக்கேயருக்கு ஏற்பட்ட பிரச்னைகளும் போர்த்துக்கேயர் இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ளச் சாதகமாக அமைந்தது. சங்கிலி குமாரனுக்கும் போர்த்துக்கேயருக்குமிடையே ஏற்பட்ட சிறு பிரச்னை போர்த்துக்கேயர் இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொள்ள வழி வகுத்தது.

பாலர் அபிநயப் பாடல்-5

### குஞ்சும் கோழியும்

கோழிக் குஞ்சைக்
கூட்டிக் கோழி
குப்பை மேட்டைக் கிண்டுது

கோழிக் குஞ்சுக்
கூட்டம் ஓடிக்
கொத்தி உணவை உண்ணுது

கோழிக் குஞ்சைத்
தூக்கப் பருந்து
வானில் வட்டம் போடுது

கோழி சத்தம்
போட ஓடிக்
குஞ்சு மறைந்து கொள்ளுது

- கல்வயல் வே. குமாரசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கும் மண்டை ஓடுகள்

## மாணவர் சிறுகதை

பிரபல சி. ஐ. டி. நிபுணர் எட்வேட் தனது வீட்டில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று டெலிபோன் அலறியது. அதை எடுத்துப் பேசியவரின் முகம் மலர்ந்தது மேலிடத்திலிருந்து அவருக்கு உடனடியாக வரும்படி அழைப்பு வந்தது, அதைக் கேட்டதும். ஏதோ முக்கிய கேஸைத் துப்பறியலே தன்னை அழைக்கிறார்கள் என்று ஊகித்துக்கொண்டார்.

அடுத்து அவர் மிகவும் உற்சாகமாக ஒரு பாட்டை சீட்டியடித்துக்கொண்டே வந்து தமது காரில் ஏறினார். கார் மின்னல் வேகத்தில் பறந்தது.

சி. ஐ. டி. எட்வேட் என்றால் கொள்ளைக்காரருக்கெல்லாம் குலை நடுக்கம்தான். பல கேஸ்களைத் துப்பறிந்தவர். மின்னல் வீரன் என்று பட்டம் பெற்றவர். அப்படிப்பட்டவரைக் கூப்பிடுகின்றபடியால் அது மிகவும் நுணுக்கமான கேஸாகத்தான் இருக்கவேண்டும்.

அவரது கார் ஒரு மாடிக் கட்டிடத்துமுன் நின்றது. மாடிப்படியில் தாவி ஏறி ஒரு அறைக்குள் நுழைந்ததும் மேலதிகாரி பீட்டர் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

'காந்தித் தெருவில் இரவில் மண்டை ஓடுகள் உயரத்தில் பறந்து பறந்து நடமாடுகின்றன. தீச் சுவாலைகள் மேலெழுந்து கீழே வந்து திரும்பவும் மேலெழுந்து இப்படியாக மேலும் கீழுமாக ஆடுகின்றன. அதே தெருவில் சென்றவாரம் ஒரு லொறி கொள்ளையடிக்கப்பட்டது. இதனால் அங்கு மக்கள் செல்லப் பயப்படுகிறார்கள். இதை துப்பறிந்து இந்தச் சிக்கலில் இருந்து காப்பாற்ற உம்மை நியமிக்கிறேன் என்று எட்வேட்டிடம் கூறினார் பீட்டர்.

'சரி செய்கிறேன் .சார்' என்று எட்வேட் மகிழ்ச்சியுடன் கூற 'வெற்றியுடன் திரும்பி வாருங்கள். குட்பை' என்று கூறிய அவரை வழியனுப்பிவைத்தார்.

இருட்டிய பிறகு காரை எடுத்துக்கொண்டு காந்தித் தெருவை நோக்கிச் செலுத்தினார் எட்வேட். அத் தெருவுக்குள் நுழைந்ததும் 'ஹ்ஹா... ஹ்ஹா...ஹ்ஹா, என்று பெரிய சிரிப்புச் சத்தம் கேட்டது. அவர் சிறிதும் அஞ்சாமல் காரைச் செலுத்தினார் பேர்வையை மேலே திரும்பினார். பீட்டர் சொன்னது சரிதான் அங்கே சில மண்டைஓடுகள் அங்கேயும் பறந்துகொண்டிருந்தன தனது கழுகுக் கண்களால் நுணுக்கமாக ஒன்றை அவதானித்துவிட்டார், அதாவது தீச்சுவாலைகள் எல்லாம் அந்தத் தெருவின் இரு பக்கங்களிலும் நின்ற மரங்களின் மேலேயிருந்துதான் அடியானவே ஒழிய மரங்களின் அப்பாலும் இப்பாலும் வரவில்லை. மண்டை ஓடுகளும் இரு கரையிலும் உள்ள மரங்களுக்கு இடையேதான் சுறந்தன. இதனால் இது ஏமாற்று வேலைதான்என்பதைஉணர்ந்து கொண்டார் அவர்.

அதே நேரம் மரங்களுக்கிடையேஇருந்துகுண்டு பாயவே காரை வேகமாக ஓட்டி காந்திக்கிராமத் தெருவை விட்டு வெளியேறினார் அவர். மறுநாள்இதைக்கவனித்துக்கொள்ளலாம் என்று எண்ணமிட்டவராக தனது வீட்டைநோக்கிக் காரைச் செலுத்தினார்.

மறுநாள் நண்பகல் நேரம் எட்வேட் பொலிஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன்பண்ணினார். 'அன்று இருட்டியதும் பொலிசாருடன் ஒரு றக்கில் போரிடுவதற்குத் தேவையான சகல ஆயுதங்களை அனுப்பவும்.' அவர்களோடு இன்ஸ்பெக்டர் ராகவன், சிவராமன் ஆகியோரையும் காந்தித்தெருவுக்கு இரவு எட்டுமணிக்கு அனுப்புமாறு பீட்டரைக் கேட்டுக்கொண்டார்.

'இன்ஸ்பெக்டர் இராகவன் கடந்த சில வாரங்களாக லீவில் இருப்பதாகத் தெரிவித்ததை அடுத்து 'இன்ஸ்பெக்டர் சிவராமனை அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

மாலை ஐந்து மணியானதும் எட்வேட் தனது காரைக் கிளப்பிக்கொண்டு காந்தித் தெருவை நோக்கிச் செலுத்தினார். காந்தித் தெருவுக்குச் சற்றுத்தள்ளி காரை நிறுத்திவிட்டுத் தெருவுக்குள் நுழைந்தார். சில மரங்களின் மேல் ஏறிப்பார்த்தார். ஒரு தடயமும் கிடைக்கவில்லை. தற்செயலாக அவருடைய பார்வை நிலத்தில் சென்றது, அங்கே காலடிகள் கிடந்தன. மக்கள் பயந்து நடமாடாத தெருவில் எப்படிக் காலடிகள் தென்படும்? என்று எண்ணிய அவர். இது கொள்ளைக்காரர்களின் ஏமாற்று வேலைதான் என்று முடிவுசெய்து அங்கேயே மறைந்து நின்றுகொண்டார்.

இரவு ஏழு மணியானதும் அவருடைய சந்தேகம் உறுதியாயிற்று. சில மனிதர்கள் ஓடி வந்து மரங்களில் ஏறினார்கள். அவர்களில் சிலருடைய கைகளில் மண்டை ஓடுகளும், அதன் இரு பக்கத்திலும் கறுப்புநிற றப்பர் கயிறுகள் பிணைக்கப்பட்டிருந்தன. சிலருடைய கையில் தீப்பந்தங்களின் கைப்பிடிப் பக்கத்தில் கறுப்பு இறப்பர்க் கயிறுகள் பிணைக்கப்பட்டிருந்தன. எல்லோரும் மரத்தில் ஏறினார்கள். ஒருவன் மண்டை ஓட்டின் ஒரு பக்க கறுப்பு றப்பர் கயிற்றைப் பிடிக்க மறு பக்கத்துக் கயிறை வேறு ஒருவனும் பிடித்து மரத்தில் ஏறி கிளைகளில் கட்டிவிட்டு இழுத்தார்கள். நடுவில் இருந்த மண்டை ஓடு மேலும், கீழும், பக்கமும் ஆடியது. இதே போன்று தீப்பந்தங்களும் கட்டப்பட்டன.

இப்போது எட்வேட்டுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. இரவு எட்டு மணி ஆனதும் பொலிஸ் 'றக்' வந்தது. எட்வேட்டும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தார். கொள்ளைக்காரர்கள் மரத்திலிருந்து குதித்தார்கள். இரு சாராருக்குமிடையே சண்டை மூண்டது.

துப்பாக்கி ரவை பட்டு மண்டை ஓடு ஒன்று அறுந்து எட்வேட்டின் கையில் விழுந்தது. அதைப் பிடித்த எட்வேட்டுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னவென்றால் அது உண்மையான மண்டை ஓடு அல்ல. கடதாசி மட்டையால் செய்யப்பட்டது.

ஈற்றில் பொலிசாரிடம் சரணடைந்த கொள்ளைக்காரர்களில் ஒருவன் தமது இருப்பிடத்துக்கு வழிகாட்டினான். பொட்டல் வெளியில் 'றக்' கையும், காரையும் நிறுத்தச் சொன்னான், சில பொலீஸ்காரர்கள் றக்கில் இருந்த கொள்ளைக்காரர்களைக் காவல் காக்க, வழிகாட்டியவனோடு மற்ற எல்லோரும் இறங்கினார்கள். வழிகாட்டிய கொள்ளைக்காரன் ஓரிடத்தில் குனிந்து 'சுவிச்'போல் இருந்த இரும்புக்கம்பியைத் தட்டினான். உடனே நிலத்திலிருந்து ஒரு பலகை இடம்பெயர்ந்தது. இடம்பெயர்ந்த இடத்தில் உள்ளே செல்ல படிகள் தெரிந்தன.

எல்லோரும் உள்ளே இறங்கினார்கள். இறங்கியதும் வழிகாட்டியவன் உள்ளே இருந்த சுவிச்சை ஆட்டியதும் இடம்பெயர்ந்த பலகை மூடிக்கொண்டது. உள்ளே சென்றதும் அங்கே மூன்று அறைகளும் ஒரு மண்டபமும் இருந்தன. உள்ளே இருந்த கொள்ளைக்காரருக்கும் பொலிசாருக்குமிடையே சண்டை மூண்டது. ஈற்றில் கொள்ளையர் எல்லோரும் கைதுசெய்யப்பட்டனர். ஓர் அறைக்குள் தங்கக்கட்டிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

எவ்வளவு மிரட்டியும் கொள்ளையர் தமது தலைவனின் இருப்பிடத்தைச் சொல்ல மறுத்து விட்டனர். எல்லோரும் மண்டபத்துக்குள் நுழைந்தனர். அவர்கள் உள்ளே நுழைந்ததும் ஹா, ஹா, ஹா என்று பெரிய சிரிப்புச் சத்தம் கேட்டது. அது எங்கிருந்து வந்தது என்று எட்வேட்டுக்குக் கண்டுபிடிக்க முடியவில்லை, திடீரென்று ஒரு குண்டு எட்வேட்டின் கையை அருகிக் கொண்டு சென்றது.

(9-ம் பக்கம் பார்க்க)

-சிவ. மகிந்தன்:
(யாழ். இந்துக் கல்லூரி)

## மாணவர் சிரிப்பு

ஆசிரியர்: கந்தன் மரத்தால் விழுந்தான். இது என்ன காலம்?
மாணவன்: அவனுடைய கஷ்டகாலம்.

ஆசிரியர்: உமக்குத் தெரிந்த பூ வகைகளை கூறுக?
மாணவன்: உப்பு, நெருப்பு, அடுப்பு, அப்பு, இனிப்பு.

க. துரைசிங்கம்,
யா/கட்டுவன்புலம்,
அ. த. க. பாடசாலை,
தெல்லிப்பழை.

ஆசிரியர்: ரவி! நீ நான் தருகிறவீட்டுப்பாடங்களை செய்வதில்லையே வீட்டிலே வேலையோ?
மாணவன்: சேர்! எங்கை படிக்கநேரம். மூன்றரைக்கு பாடசாலை விடும். விட்ட உடனே வீட்டை போய் சாப்பிடுகிறது. புத்தகத்தை எடுத்துக் கொண்டு ரியூசனுக்கு போறதுதானே வேலை.

ந. தவச்செல்வம்,
நெல்லியடி மத்திய
மகா வித்தியாலயம்.

ஆசிரியர்: இச் செய்யுளின் கருத்து யாருக்காவது... தெரியுமா?
மாணவர்கள்: .........!
ஆசிரியர்: ஒருவருக்கும் தெரியாதா?
ஒரு மாணவன்: தெரியும் சேர்!
ஆசிரியர்: சொல் பார்க்கலாம்.
மாணவன்: இதனை எழுதிய புலவருக்குத் தெரியும், சேர்.

-செல்வன்
க. இராஜேந்திரன்
அரசினர்
தமிழ் பாடசாலை,
இலுப்பைக் கடவை.

## பொங்கல் பொங்குகவே!

இன்பக் குதூகலிப்பில்
இதயத்தின் பூரிப்பில்
பொங்கும் புதுவருடப்
புதுமை நினைவுகளும்
தங்கத் தரணிதனில்
தண்மைக் குணம் சிறக்க
என்றும் இனிக்கும்
புதுப்பொங்கல் பொங்குகவே

க. மதிவதனு
(மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை)

# காசு பேசுகிறது!

நாணயம் என்ற பொருளில் வழங்கப்படும் காசு என்ற சொல், அதே போன்று ஒத்த உச்சரிப்புள்ள "காசா" என்ற போர்த்துக்கீசிய மொழிச் சொல்லிலிருந்து தோன்றியிருக்கக்கூடுமென்று அகராதிகள் காட்டுகின்றன. "காஷ்" என்ற அங்கிலச் சொல்லும் "காசி" என்ற சிங்களச்சொல்லும் கூட இதே பொருளையே உணர்த்துகின்றன.

தமிழ்மொழியில் காசு என்னும் சொல்லை விகுதியாகக் கொண்ட சில சொற்றொடர்கள் உண்டு.

(1) முத்தக்காசு: நாட்டு வைத்தியர்கள் இதை அறிவார்கள். கோரைக்கிழங்கு வைத்தியர்கள் முத்தக்காசு என்கிறார்கள்.

(2) சனிக்காசு: இது ஆசிரியர்களின் சம்பளத்தைக் குறிக்கும். பழங்காலத்தில் திண்ணைப்பள்ளிகளில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்றுதான் மாணவர்கள் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்து வந்தார்களாம். எனவே அப் பெயர் பெற்றது.

(3) அம்மன் காசு: புதுக்கோட்டை சமஸ்தானத்தில் (இந்தியாவிலுள்ளது) வழங்கப்பட்ட ஒரே நாணயம். தொண்டைமான் மன்னர்களின் குலதெய்வமாகிய பிரகதாம்பாள் அம்மனின் உருவம் இதில் இருக்கும். பத்து அம்மன் காசுகளின் மதிப்பு மூன்று நயாபைசாவுக்கும் (இந்திய நாணயத்தின் பெயர்) சமமெனலாம்.

(9-ம் பக்கம் பார்க்க)

# மாணவர் எண்ணம்

மாணவ மணிகளுக்கு
தித்திக்கும்
தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்!

-கண்டோஸ்

## மணிக் கவிதை

### சிறுவர்கள்

அவனியில் அரும்பிய
அழகிய பயிரிவை-
இவர்க்கு
அறிவெனும் நீரினை
அன்புடன் வார்த்து
அவர் தம் வாழ்வில்
உயர்ந்திட வாழ்த்துவம்.

### விஞ்ஞானிகள்

அறிவெனும் தூரிகை
யால்
அவனியில் மாந்தருக்கு
புரிகின்ற சேவைகள்
புத்தம் புதியன
பூமியில் இவர்கள் சேவை
என்றும்,
பூத்திடல் வேண்டும்

இயற்றியவர்:
செல்வன்
சு. யோகராசா
(டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி)

## நிகழ்வுகள் ..

காலத்தின் வேகத்தில்
கரைந்து
கண்ணீரை வரவழைக்கும்
கணநேர நிகழ்வுகளை
எந்நாளும்
மறப்பதற்கோ
மறைப் பதற்கோ
முடிவதில்லை!

முற்றுப்பெறு
முன்னை மகிழ்ச்சியின்
முனைவில்--
சிந்தனையின் கோலங்கள்-
சிந்தை கவர்ந்தவரின்
நினைவுகள்;
புதுவுலகின் கனவுகள்
இப்படியே
நீண்டுகொண்டு
செல்லும்!

கண்ணீர்த் திவலைகளால்
கன்னங்களை நனைப்பது
உள்ளத்தில் சின்னவரா
உலவிய நினைவுகள்;
கல்லூரிக்காலத்தின்
கனவுகள்--

மகாஜன மதிலில்
சாய்ந்திருந்து
அம்டனை வயற்காற்றை
சுவைத்த அனுபவங்கள்,
ரியூஷனுக்கு செல்கையில்
வாத்தியார் வீட்டு
பாமரத்தின்
பாங்காய்க் கெறிந்த
நினைவுகள்
தொடரும்--,

மாணவப் பருவம்
திரும்பாதோ எனும்
எண்ணம்
மனதை நிறைக்க
கன்னத்தை
கைதுடைக்கும்.

-நா. சபேசன்,
மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL** (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
JAMES COBURN. Potrays a man with a mission... gathering a team of SKYRIDING daredevils to rescue a kidnapped wealthy American family!!
They soared from the skies to stage the most daring rescue ever filmed!
**SKY RIDERS**
See...the most exciting, dangerous and fastest Air drama...FULL OF ACTION Co-starring: SUSANNAH YORK...ROBERT CULP and CHARLES AZNAVOUR
Color by DELUXE

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தினசரி: 10-30, பி. ப. 2-30, 6-30, 9-30
ஏ. வி. எம். ராஜன், ஜெயசித்திரா, ஜெய்கணேஷ், அசோகன்
**தாயில்லா குழந்தை**

LAST 2 DAYS
**RANEE** (JAFFNA) Daily at: 10-30, 2-15 4-45, 7-15 & 9-45p.m.
Terrence Hill Bud Spencer in
**CRIME BUSTERS**
பொங்கல் விருந்தாக 15-ந் திகதி முதல்
நாகேஸ்வரராவ் - சாவித்திரி நடித்த
உள்ளத்தை உருக்கும் காதல் திரைகாவியம்
**தேவதாஸ்**

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த
**தீபம்** (வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்
4-வது ஜனத்திரள் வாரம்
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஒடுகிறது!
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த
**அந்தமான் காதலி**
(வர்ணப்படம்)

100-வது வெற்றித்திருநாளைநோக்கி
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர், ஸ்ரீதேவி, எம். ஆர். ராதா
**டாக்ஸி டிரைவர்**
கலர்

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
**எங்கள் தங்க ராஜா** (புத்தம்புதிய பிரதி-கலர்)

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
**ஷண்முகப்பிரியா**

## சேதுபந்தனம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கரு பொருந்தியவை என்பதற்கில்லை.

மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரையில் தெளிவான ஆற்றொழுக்கான நடையை மொழிபெயர்ப்பாசிரியர் கையாண்டிருக்கிறார் என்பதற்கு ஐயமில்லை. இருப்பினும் ஆங்காங்கே செந்தமிழ்ச்சொற் பிரயோகங்களும் கலைச்சொல்லாட்சியும் கலப்பதாலும் சிங்களமரபுகள் கலாசாரங்களை யொட்டிய சொற்பிரயோகங்கள். சொற்றொடர்களைக் கையாள்வதாலும் ஒரேவகைத்தான நடையினைக் காணமுடியாதிருக்கிறது. எனினும் மொழிபெயர்ப்பாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கதே.

'சோனு'

## பறக்கும்......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

''இங்கிருந்து எவரும் தப்ப முடியாது. எல்லோரும் சரணடைந்து விடுங்கள்'' என்று ஒரு குரல் கேட்டது. இப்பொழுது தான் கண்ட குமிழ் எட்வேட்டுக்கு நினைவுவந்தது. உடனே பண்டபத்தை விட்டு வெளியே ஓடினார். எட்வேட் அப்பொழுது ''எட்வேட் நீ தப்பமுடியாது'' என்று மீண்டும் குரல் கேட்டது. எட்வேட் ஓடிச்சென்று குமிழைத் திருகினார். அந்தக் குமிழுக்குப் பக்கத்தில் ஒரு கதவு திறந்தது. எட்வேட் உள்ளே நுழைந்தார். உள்ளே ஒருவன் ஒரு கதிரையில் அக் கதவுக்கு முதுகைக் காட்டியபடி உட்கார்ந்திருந்தான். அவன் டெலிவிஷன் திரையில் மண்டபத்தில் நின்றவர்களைப்பார்த்து மைக்கில் பேசிக்கொண்டிருந்தான். அவனுடைய வலது கையில் துப்பாக்கி இருந்தது. அதை சுவரில் இருந்த ஓட்டையில் செருகிப்பிடித்துக் கொண்டிருந்தான், அந்த ஓட்டைக்கும் மண்டபத்துக்கும் தொடர்பு இருக்கவேண்டும். அதனால்தான் எட்வேட்டின் கையின் அருகே சுட்டிருக்க வேண்டும்.

அவன் பேசிக்கொண்டிருந்தான். ''ஒருவரும் அசையாதீர்கள். அசைந்தால் பிணமாக நிலத்தில் விழுவீர்கள், சிறிது நேரத்தில் எட்வேட் மண்டபத்திற்கே திரும்பிவருவான். அவன் இங்கிருந்து தப்பிச்செல்ல முடியாது. அவனால் என்னை ஒன்றும்செய்ய முடியாது'' என்று கூறினான். அது முடியும் என்று கூறியபடி தனது துப்பாக்கியை எடுத்து அவனது முதுகுக்கு நேர நீட்டினார் அவர். குரலைக் கேட்டுத் திரும்பிய அந்த மனிதன், உடனே துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு கையை மேலே உயர்த்தியபடி நின்றான். அவன் முகமூடி அணிந்திருந்தான். அவனது முகமூடியைப் பற்றிஇழுத்தார் எட்வேட். இழுத்ததும் அவருடைய கண்கள் வியப்பால் விரிந்தன.

அங்கே நின்றுகொண்டிருந்தது இன்ஸ்பெக்டர் ராகவனே.

எல்லோரையும் கைதுசெய்து கொண்டு பொலிசார் ஸ்டேசனை நோக்கி விரைந்தனர். எட்வேட்டுக்குக் பாராட்டும் பரிசும் கிடைத்தது. அது மட்டுமல்ல ஜனாதிபதியிடமிருந்தும் கிடைத்தது.

(யாவும் கற்பனை)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - லதா
**உழைக்கும் கரங்கள்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். [illegible]
[illegible]
**உழைப்பவன்**

அச்சுவேலி

# விவசாயி மர்ம மரணம்

## நால்வரும் தொடர்ந்து ரிமாண்ட்

(மாவிட்டபுரம்)

அச்சுவேலியில் விவசாயி ஒருவர் மர்மமான முறையில் கிணறு ஒன்றினுள் இறந்து கிடந்த சம்பவம் தொடர்பாக ரிமாண்டிலிருந்த 4 சந்தேக நபர்களும் தொடர்ந்து இம் மாதம் 22-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த அப்பையா துரைராஜா என்னும் விவசாயி மர்ம உறுப்பு நசியுண்ட நிலையில் கிணறு ஒன்றினுள் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டதையடுத்து விசாரணை செய்த காங்கேசன் துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் சின்னட்டி சினியன் சின்னமணி (பெண்) முத்தன் வீமு, இராசதுரை இரத்தினம் (பெண்) சிவலை துரைச்சாமி, கிட்டினன் துரைசிங்கம், குட்டியன் இராசதுரை, ஜோசெப் நடராசா ஆகிய சந்தேக நபர்களை கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்த சமயம் இவர்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

பின்னர் முதல் நால்வரும் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு ஏனையோர் ரிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இந்நபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட சமயம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இவர்களையும் பிணையில் விடுமாறு கோரினார்.

நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி யாழ். சட்ட வைதிய அதிகாரி கொழும்பு இரசயானப் பகுதி அதிகாரி ஆகியோரிடமிருந்து அறிக்கைகளைக் கோருமாறு உத்தரவிட்டு இம்மாதம் 22-ம் திகதி வரையும் சந்தேக நபர்களை ரிமாண்டில் வைக்குமாறும் அதன் பின் பிணை பற்றி ஆராய்வதாகவும் தெரிவித்தார். (அ)

யாழ். மாவட்ட அவசரகால நிலை

அசம்பாவித சம்பவங்கள்

# ஜன. 20ல் யாழ். நகரில் தெரிவுக்குழு விசாரிக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அவசரகால நிலை அமுலிலிருந்த போது இடம்பெற்ற கொலைச் சம்பவங்களுக்கும் பொலிசாருக்கும் தொடர்புண்டா என்பதுபற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இம்மாதம் 20ம் திகதி யாழ்ப்பாணத்தில் தனது விசாரணையை நடத்தும்.

அவசரகாலச்சட்டம் அமுலிலிருந்தபோது கொலையுண்ட இளைஞர்களின் பெற்றோர்கள் மற்றும் அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் டலர் இத்தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பர்.

சாட்சியமளிப்பவர்களுக்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தெரிவுக்குழுத் தலைவர் அமைச்சர் திரு. அத்துலத்முதலி தலைமையில் யாழ்.செயலகத்தில் விசாரணை நடைபெறும். (இ)

# தாலிக்கொடி கொள்ளை சந்தேக நபர்களுக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

அச்சுவேலி தாலிக்கொடி கொள்ளை குறித்த சந்தேக நபர்கள் நால்வரும் தலா 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அச்சுவேலியைச் சேர்ந்த ஞா. சாரதாதேவி என்னும் பெண்மணி வீட்டில் தனித்திருந்த சமயம் அதிகாலை 3 மணி போல் வீட்டினுள் புகுந்த இனந்தெரியாதர்தகள் 10 ஆயிரம் ரூபா பெறுமதிவான அவரது தாலிக்கொடியை அறுத்துச்சென்றிருந்தார்கள்.

இதுதொடர்பாக கைதான ஆறுமுகம் ராஜ்குமார், அப்புத்துரை வரதராசா, செல்லத்துரை கருணாநிதி, சிவரத்தினம் சண்முகலிங்கம் ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நபர்கள் மீண்டும் தம்முன் ஆஜர்செய்யப்பட்ட சமயம் தலா 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி மேல் விசாரணையை பெப்ரவரி 11-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

## காசு......

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(4) சாணாரக்காசு: வராகன், கழஞ்சு என்று வழங்கி வந்த பொற்காசுகளைப் போல இதுவும் ஒரு பொற்காசின் பெயர்.

(5) குடிக்காசு: கிராமங்களில் வசிக்கும் குடிகள் செலுத்தும் வரி குடிக்காசு எனப்படும்.

(6) நாய்க்காசு: டேனிசுக்காரர்கள் இந்தியாவில் புழங்கவிட்ட நாணயத்தை தென் மாவட்டத்திலுள்ளவர்கள் நாய்க்காசு என்று அழைத்தனர். அந்நாணயத்தில் 3 நாய்கள் ஓடுவது போன்ற அச்சுண்டு. டென்மார்க் நாட்டின் அரசு முத்திரையுள்ள மூன்று சிங்கங்களாகும். அவை இன்றும் தரங்கம் பாடியின் சுற்றுப்புறங்களில் இவ்வகைக் காசுகளைக் கண்டெடுக்கலாம்.

தொகுப்பு:
மஞ்சுளா நமசிவாயம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## பொருளாதாரத் திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய பொருளாதாரத் திட்டத்தினை ஹார்வாட் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் குறுகிய காலத்தில் வரையவுள்ளது. இதன் பொருட்டு ஆறுபேர் கொண்ட நிபுணர்குழு ஒன்று நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல்லின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ளது.

இவர்கள் திட்டமிடல் அமைச்சு அதிகாரிகளுடன் இணைந்து இலங்கைக்கான புதிய பொருளாதாரத் திட்டத்தினை வரையும் பணியில் ஈடுபடவுள்ளனர். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘தமிழ்மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறார் இந்திரா காந்தி’

## யாழ். எம். பி. கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

‘இந்திரா காந்தி தமிழ் மக்களுக்கு ஒரு விடிவிளக்காகத் திகழ்கின்றார்: எங்கு தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும் அவர்களுக்காகக்குரல் கொடுப்பதாகத் திடசங்கற்பம் பூண்டுள்ளார். அவர் இன்று இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றியதால் தமிழ் மக்கள் இன்று பெருமையடைவதுடன், தமிழ் மக்களுக்கு இன்று விடிவுகாலம் வந்துவிட்டது என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது.

தமிழாராய்ச்சி மாநாடு பள்ளிவாசல் அசம்பாவிதம், இனக்கலவரங்கள் போன்ற சம்பவங்களின் போது கொலையுண்டவர்களின் நினைவாக யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன்இவ்வாறு கூறினார்.

கூட்டம் திரு. சே. நேசையா தலைமையில் நடைபெற்றது. திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சாவகச்சேரியில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்திரராசா கொலை செய்யப்பட்டார். வீட்டில் படுத்திருந்தஇன்பமும் அவரது மைத்துனரும் கைதுசெய்யப்பட்டபின் கொலைசெய்யப்பட்டனர். வல்வெட்டித்துறையில் வைத்து ஒருஅப்பாவிஇளைஞன் இராணுவத்தினரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். துப்பாக்கியைக் கண்டு பயந்து ஓடியவர்களுக்குக் கிடைத்தது துப்பாக்கிச்சூடு. இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் பலர்.

### என்னை அடையாள அட்டை கேட்டனர்

இப்படியாகத் தங்களால் கொலைசெய்யப்பட்டவர்களுக்காகச் சாட்சி சொல்ல எவரும் முன்வரமாட்டார்கள் என்று பொலிசாரும் இராணுவத்தினரும் இறுமாப்புக்கொண்டிருந்த வேளையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவர் சாட்சியமளிக்க முன்வந்துள்ளனர்.

இந்திரராசாவின் மரண விசாரணை நடைபெற்றபோது அது கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டதுடன் பொலிஸ் அதிகாரியைக் கைதுசெய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கு எதிர் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் கொழும்பு சென்றிருப்பதாக அறிகிறேன்.

வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் மரணவிசாரணையில் பங்குபற்றச் சென்றுகொண்டிருந்த என்னை இராணுவத்தினர் மறித்தனர். நான் யாழ்ப்பாண எம். பி. என்று கூறிய போதும் அவர்கள் என்னைவிட மறுத்து, அடையாள அட்டை கேட்டனர்.

ராணுவத்தினர் என்னைக் கடமைசெய்யவிடாது தடுத்ததையும் பாராளுமன்றத்தில் எடுத்துக்கூறினேன். எமக்கென ஒரு தனிநாடு அமைக்குமட்டும் இந்த நிலையில் தான் நாம் வாழவேண்டியிருக்கும்.

### எதுவும்செய்ய முடியாத நிலை

பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களின் பெற்றோர்கள் எம். பி.மாரைக்கண்டு நடவடிக்கை எடுக்கலாம் என எண்ணி எம்மிடம் வந்து முறையிடுகின்றனர்.

நாம் எம். பிக்களாக இருந்தபோதும் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். ஒரு நீங்கள எம். பி. என்னைப்போல் ராணுவத்தால் நடுவழியில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டால் இன்று நாட்டில் நடந்திருப்பதே வேறாக இருந்திருக்கும். தமிழ் மக்களினதும் தலைவர்களினதும் நிலை இப்படியிருக்கிறது. இந்த நிலை மாறவேண்டுமானால் நாம் கட்டுக்கோப்பாக ஒரு இயக்கத்தில் நின்று தலைவரின் சொல்படி செயல்பட வேண்டும் என்றார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன் உரையாற்றுகையில்கூறியதாவது:

‘இந்தியாவிலும் மலாயாவிலும் அரசாங்கங்களின் ஆதரவுடன் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்றது. ஆனால் இலங்கையில் அரசாங்கத்தின் ஆதரவின்றிப் பொது மக்களின் ஆதரவுடனும் இம் மகாநாடு நடைபெற்றது. அதனால் இம்மகாநாடு ஏனைய நாடுகளில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாடுகளிலும் பார்க்கச் சிறப்பாக அமைந்தது.’

‘தமிழரின் போராட்ட வரலாற்றிலே 74-ம் ஆண்டு ஒரு முக்கிய கட்டத்தை அடைந்தது. அன்று எந்தவித அரசியல் கலப்பும் இல்லாது நடாத்தப்பட்ட இம்மகாநாடு குழப்பப்பட்டதால் தமிழ்மக்களின் பிரச்னை உலக நாடுகளுக்குத் தெரியவந்தது.

### விஷவாயுக்குண்டு என்மீது வீசப்பட்டது

தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் பேசிக்கொண்டிருந்த போதுதான் விஷ வாயுக் குண்டு என்மீது வீசப்பட்டது. அப்போது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை எமது தொண்டர்கள் மண்டபத்திலிருந்து அப்புறப்படுத்திப் பாதுகாப்பளித்தனர்., அன்றிலிருந்துதான் இலங்கைத் தமிழரின் பிரச்னை உலகநாடுகளுக்குத் தெரியத் தொடங்கியது. அன்று அநியாயமாகப் பலர் உயிரிழந்தனர்.

வரலாறு காணாத தமிழர் கூட்டம் அன்று கூடியது. அந்தக் கூட்டத்தின் முடிவு ஒரு சோக காவியமாக மாறியது.’

### நான் மயங்கினேன்

தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றபோது ஒரு இடஞ்சலும் இல்லாது பொதுமக்கள் வீதியிலும் வளவுக்குள்ளும் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். அப்போது என் மீது ஒரு குண்டு வீசப்பட்டது. அத்தோடு நான் மயங்கிவிட்டேன். பின் தொண்டர்களால் மயக்கம் தெளிவிக்கப்பட்டேன். எழுந்து பார்த்த போது மக்கள் சின்னாபின்னப் பட்டுஓட்டம்பிடித்தனர். அந்த நிலையில்தான் அன்று 4-வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடைபெற்றது.

(கொ-இ)

---

# வேதகால ரிஷிகளின் வழிவந்தவர் ரமணர்

## நூற்றண்டு விழாவில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மகான்களைப் பற்றிய வரலாறுகளை நமது இதிகாச புராணங்களில் நாம் படிக்கும் போது "இப்படியும் ஒருவர் உண்மையில் வாழ்ந்திருக்க முடியுமா" என்று வியந்து போயிருக்கிறோம். தன்னை உணர்ந்துகொண்ட ஆத்மாவின் குணாதிசயங்களைக் கேட்கும்போது "அந்த நிலை சாத்தியமா" என்று அதிசயித்திருக்கிறோம். நம்மிடையே நம் கண்ணெதிரே இந்தக் காலத்தில் அம்மாதிரியான ஒரு மகான் வாழ்ந்து வந்திருக்கின்றார். அவர் தான் பகவான் ரமணர்.

இவ்வாறு யாழ்.திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற பகவான் ரமண மகரிஷியின் நூற்றண்டு ஜெயந்தி விழாவில் உரையாற்றிய யாழ். பதில் நீதவான் திரு. சி. கனகரத்தினம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

வேதகால ரிஷிகள் பரம்பரையில் ஒட்டியவர் பகவான் ரமண மகரிஷி. அவர் வாழ்ந்து கொண்டே ஆத்மாவுக்கு விடுதலை அளித்த ஜீவன் முத்தர் கீதையில் "ஸ்திரப்ரகஞர்" கள் என்றால் எப்படி இருப்பார்கள் என்று கூறியிருக்கின்றதோ அப்படி ஒவ்வோர் அம்சத்திலும் இருந்தவர் ரமணர். நம்மிடையே பழகிக் கொண்டும், பேசிக்கொண்டும், கலந்துகொண்டும் சகல அலுவல்களையும் கவனித்துக் கொண்டு வந்தபோதும் ஆத்ம ஒளி குன்றாது சதா விழிப்புடன் இருந்தவர். நமது சாஸ்திரங்கள் உண்மை, நமது மதமும் ஜீவனுள்ளது என்பதை நிரூபித்தவர். உபநிஷதங்களின் உபதேசங்களுக்கும் பாரத நாட்டின் ஞான மேன்மைக்கும் எடுத்துக் காட்டாகர் விளங்கியவ. தம்மை அடைந்தவர்கள் அனைவருக்கும் தாம் அடைந்திருந்த சாந்தியை அளித்தவர் அவர்.

பண்டிதர், பாமரர், ஏழை, பணக்காரரி என்ற பாகுபாடின்றி எல்லோரும் அவரை தரிசித்தார்கள்.

மகரிஷி அன்பே உருவானவர். ஒரு வார்த்தை கூடப் பேசாமலும் எல்லாப் பக்தர்களுடைய மனத்தையும் மகிழ்விக்கும் அபூர்வ சக்தி அவருக்கு இருந்தது.

உயர்ந்த அந்தஸ்தை உடையவர்கள், தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் யாவரும் மகரிஷி சூாலால் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றத் தயாராக இருந்தார்கள்.

பகவான் இறுதிவரையில் பூரண மனோசக்தியும், புலன்களின் சக்தியும் வாய்ந்தவராகவே இருந்து வந்தார். பிராணசலனம் ஒடுங்குவதற்குச் சில நிமிஷம் முன்வரையில் பகவான் தெளிவாகப் பேசிக்கொண்டிருந்தார்.

பெரிய தத்துவ ஞானிகளுக்கும், விஞ்ஞான மேதாவிகளுக்கும் எட்டாதவராகவும், வேதங்களின் உருவாகவும், ஜீவன் முத்தராகவும் விளங்கிய ரமண பகவான் நம்மைப் பிரிந்துவிட்டார். அவரது தேகத்தை இன்று நாம் காண இயலாது. ஆனால் அவருடைய அருள் ஒளியை நாம் நாடினால் எப்போதும் காணலாமென்றார். (வெ)

---

## மரண அறிவித்தல்

### பொன்னுச்சாமி ஆச்சிமுத்து

கலைநகர் சித்தன்கேணியைச் சேர்ந்த ஆச்சிமுத்து காலமாகிவிட்டார். இவர் பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும், காங்கேயநாதன் (மின்சார அத்தியட்சகர் கொக்குவில்), சண்முகானந்தசிவம் (மின்சார அத்தியட்சகர், மானிப்பாய்), பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலராணி, இராசலட்சுமியம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (13-1-80) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

தகவல்: பொன்னுச்சாமி. 4659

---

முற்போக்கு எழுத்தாளர்சங்க வெள்ளிவிழாவில்

# பிரதேச எழுத்தாளர்கள் கௌரவிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பெப்ரவரி மாதக் கடைசியில் நடைபெறவுள்ள இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ். கிளையின் வெள்ளிவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சியின் போது பிரதேசரீதியாகத் தமது எழுத்துக்ளில் முற்போக்குஇலக்கியச்சிந்தனையை கையாண்டு. சமூகரீதியான இலக்கியச் செழுமைக்கும் அதன் வளர்ச்சிக்கும் உறுதுணைபுரிந்த எழுத்தாளர்கள் சிலர் கௌரவிக்கப்படவுள்ளனர்

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது கொள்கைக்கேற்பச் சர்வதேச இலக்கியப் போக்குக்குக்களையொட்டியும், குறிப்பாக நடைபெற்றுள்ள இலக்கியரீதியிலான இலக்கிய சாதனைகளையொட்டியும் - பரிணமம் பற்றியும் பயனுள்ள கருத்தரங்கொன்றையும் ஒழுங்குசெய்துள்ளது.

நடைமுறையிலுள்ள நவீன இலக்கிய சிந்தனைகள்பற்றிய சாதக பாதகமான நிலைமைகளைச் சீர்தூக்கி அலசி ஆராய்வதும் - கலந்துரையாடுவதும் வெள்ளிவிழாவின் பிரதான நிகழ்ச்சிகளாக அமையும்எனத் தெரியவருகின்றது. (நா)

---

# அதிமுக இ. காங் உறவு மீண்டும் புதுப்பிக்கப்படும்

## எம் ஜி ஆர் கூறுகிறார்

சென்னை, ஜன. 12

இந்திரா காங்கிரசுடனான அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறவு மீண்டும் புதுப்பிக்கப்படும்.

இந்திரா காங்கிரசுடன் நட்புப் பாராட்ட அ. தி. மு. க.வுக்கே அதிக உரிமை இருக்கிறது.

இவ்வாறு தமிழக முதலமைச்சரும், அ. தி. மு. க. தலைவருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

---

வல்லிபுரக்கோவிலில்

# பாலமுரளி நாளை பாடுகிறார்

(யாழ்ப்பாணம்)

பிரபல தென்னிந்தியப் பாடகர் சங்கீத கலாநிதி எம். பாலமுரளி கிருஷ்ணாவின் இசைக்கச்சேரி நாளை மாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (செ)

---

# பக்தவத்சலம் ராஜினமா

சென்னை, ஜன. 12

தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரும் பழம் பெரும்அரசியல் வாதியுமான திரு. பக்தவத்சலம் அர்ஸ் காங்கிரசிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

---

# புதிய வாகனம்

(மாவிட்டபுரம்)

கொழும்புத்துறை கிழக்கு அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலுக்கெனப் புதிய எலிவாகனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது,

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசாவினால் உபயமாச்க செய்துகொடுக்கப்பட்ட இவ்வாகனம் பல கலைநுட்பங்களை உள்ளடக்கியுள்ளது.

---

# மைசூர்ப் பருப்பு விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மைசூர்ப்பருப்பின் கட்டுப்பாட்டு விலை ரூத்தலுக்கு 30 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஒரு ரூத்தல் மைசூர்ப்பருப்பின் கட்டுப்பாட்டுவிலை 4 ரூபா 90 சதமாகும். தற்பொழுது இதன் கட்டுப்பாட்டு விலை 5 ரூபா 20 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

## அறிவித்தல்

1980-1-14-ல் யாழ். சட்டக்கல்வி நிலையத்தினரால் இழுக்கப்படவிருந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு 1980-4-14-ல் நடைபெறும்.

செயலாளர், மாணவர் மன்றம்,
யாழ். சட்டக்கல்வி நிலையம். 4657

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org